Regd No. M. 4900.

16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 ஈரோடு 14-8-1948 சனிக்கிழமை மலர் 49.

# போர் ஆரம்பமாகி விட்டது!

## அமைதி தவழ அன்பு மறியல்!

### மக்களின் பேராதரவு-மாணவர்கள் வெளியேற்றம்.

★

தோழர் சி. என். அண்ணாதுரையவர்கள்
முதல் சர்வாதிகாரி.

தோழர் சி. டி. டி. அரசு அவர்கள்
படைத்தலைவர்.

மறியல் செய்யும் தொண்டர்கள்.

1. தோழியர் தனலட்சுமி
2. அவர் மகன் 5 வயது திராவிடமணி
3. என். சுப்பிரமணியன்
4. எம். அனந்தப்பன்
5. டி. டி. பாண்டியன்
6. என். கிருஷ்ணன்
7. எஸ். நடராசன்
8. கே. கண்ணப்பன்
9. கலைச் செல்வன்
10. ஜி. மாரியப்பன்.

(நமது நிருபர்)

சென்னை. ஆக 10.

இன்று காலை 8-30-மணிக்கு சர்வாதிகாரி அண்ணாதுரையவர்கள் தலைமையில் தொண்டர்களின் ஊர்வலம் காசி விஸ்வநாதர் கோவில் மைதானத்திலிருந்து புறப்பட்டு தொண்டை மண்டலப் பள்ளியை 9-மணிக்கு வந்தடைந்து அமைதி தவழ அன்பு கனிய மறியல் தொடங்கியது.

வழி நெடுகத் தொண்டர்களுக்கு மலர் மாலையணிந்து பெரு மக்கள் வழியனுப்பினர்.

50000-க்கு மேலான பொதுமக்கள் 8-30-மணிக்கே பள்ளிக்கு எதிரில் மூன்று பக்கங்களிலும் கூடிவிட்டனர். போலீஸ் கமிஷனர் முதல் எல்லாப் பெரிய உத்தியோகஸ்தர்களும் பள்ளி முன்பு கூட்டம் இல்லாதபடி பாதுகாத்தனர்.

"தயவு செய்து இந்தி வகுப்புக்குச் செல்லாதீர்கள்" "இந்தி படியாதீர்கள்" என்று தொண்டர்கள் கைகூப்பிய வண்ணம் பள்ளியில் நுழையும் மாணவர்களை வேண்டிக் கெஞ்சினவாறே நின்றனர். இடை இடையே "இந்தி ஒழிக" 'தமிழ் வாழ்க" என்றும் ஒலித்தனர்.

இன்றைய மறியலினால் பள்ளிக்குச் சென்றிருந்த 7 மாணவர்கள் இந்தி படிக்கப் பிரியமின்றி பள்ளியை விட்டு வெளியேறினர்.

அமைதியான முறையில் 10-30 மணி வரை மறியலில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் பள்ளி தொடங்கியவுடன் ஊர்வலமாக வந்து சிவஞானம் பார்க்கை யடைந்தனர்.

படைத்தலைவர் தோழர் அரசு அவர்கள் அரை மைல் நீளத்திற்குத் தன்னைத் தொடர்ந்து வந்த பொதுமக்கள் அடங்கிய அந்த ஊர்வலத்தில் நின்று உருக்கமாகப் பொது மக்களை—பெற்றோர்களை வேண்டிக்கொண்டதும், "இந்தி ஒழிக" என்று பொது மக்கள் உற்சாகத்தோடு ஆர்வம் நிறைந்து ஒலித்ததும், பொதுவாக மறியல் மிக மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

மறியல் தொடர்ந்து நடைபெறும், இன்னுஞ் சில நாட்களில், மேலும் சில பள்ளிகளின் முன்பு மறியல் தொடரலாம் என அறிகிறேன்.

வெளியேறிய மாணவர்கள்.

1. இராமலிங்கம்
2. பெருமாள்
3. இளங்கோவன்
4. ராஜாபாதர்
5. டி. ஜி. முருகேசன்
6. சந்திரசேகரன்
7. சுதர்சன ராவ்.

# கனவு நனவாகுது!

★

என் கையில் ஜவஹர் "தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள்" என்ற புத்தகம் இருந்தது. ஒவ்வொரு கடிதமாகப் படித்தேன். "சென்னையில் தனது சுற்றுப் பிரயாணம்" என்ற தலைப்பில் ஒரு கடிதம் வரையப்பட்டிருந்தது. அது இது.

அன்புள்ள இந்திரா,

அண்மையில் நான் சென்னை சென்றிருந்ததைப் பற்றியும் ஆங்கு நிகழ்த்திய சொற்பொழிவுகளையும் செய்தித் தாள்களில் படித்திருப்பாய் என நம்புகிறேன். சென்னையில் நான் கண்டவைகளையெல்லாம் விரிவாகக் கூற வேண்டுமென்ற விருப்பமிருப்பதால் இதனைத் தீட்டுகிறேன்.

ஜூலை மாதம் 24-ந் தேதி மீனம்பாக்கம் விமானக் கூடத்தில் போய் இறங்கினேன். விமானத்தை விட்டு இறங்கியதும் மக்கள் ஓடோடியும் வந்து என்னை வரவேற்றார்கள். எனக்காக சென்னை மக்கள் சைதாப்பேட்டையிலிருந்து சென்ட்ரல் ஸ்டேஷன் வரை நின்றுகொண்டிருந்தார்கள். ஆடவரும் பெண்டிரும் இளையோரும் முதியோரும் ஒன்றாகத் திரண்டுவந்து தோளோடு தோள் சேர்ந்து நின்ற காட்சியை நான் மறக்கவே முடியாது. ஒரு கார் போவதற்குக் கூட இடமில்லாமல் ஜனக் கூட்டம் சேர்ந்திருந்ததென்றால் மக்கள் தொகை எவ்வளவு இருக்குமென்று நீயே ஊகித்துக்கொள். நானெங்கு சென்றாலும் அங்கெல்லாம் மக்கள் திரண்டு போய்க்காத்துக் கொண்டிருந்தார்கள். அப்பப்பா! ஒரு தலைவன் மேல் எவ்வளவு உள்ளன்பு வைத்திருக்கிறார்கள் என்பது அந்தக் காட்சிக்குப்பிறகு தான் நான் தெரிந்துகொண்டேன்.

சென்னையில் எவ்வளவோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். எனது கண்களைச் சுற்றி மக்களின் முகங்களை உற்று உற்றுப் பார்த்தேன். மக்கள் ஆர்வம் ததும்பிய கண்களோடு, அன்பினால் பரவசமடைந்திருந்த காட்சியையும் கண்டு களிப்பெருவகை அடைந்தேன். நகரசபை படித்தளித்த வரவேற்பின் போதும், ஹிந்தி பிரசார சபையின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலும், காரைக்குடி வைபவத்தின் போதும், சட்டசபை மன்றத்தில் ராஜாஜியைப் பற்றி புகழ்ந்துரைத்த போதும், பெண்கள் கூட்டத்தினிடையே இருந்த போதும், என் எண்ணம் மக்கள் நடவடிக்கைகளிலே ஈர்த்திருந்தது.

இந்திரா! ஏற்கனவே நான் உனக்கு தென்னாட்டு மக்கள் வாழ்க்கை முறையைப் பற்றியும் அவர்கள் பேசும் பண்டை மொழியைப் பற்றியும் எழுதியிருந்தது நினைவிருக்குமென எண்ணுகிறேன். ஆமாம், இப்பொழுது சென்ற போதும் கூடத்தான் அவர்கள் வாழ்க்கை முறையைக் கவனித்தேன். அவர்கள் மொழி, கலாச்சாரம், நாகரீகம் முதலிய அனைத்தும் தனிப்பட்டவை. எவ்வளவு அமைதியான முறையில் வாழ்க்கையை நடாத்துகிறார்கள் தெரியுமா? வங்காளியும், நவகாளியும் போன்று சென்னையும் இருக்குமென்று நினைத்தேன். அதனால்தான் வகுப்பு வாதத்தை வளரவிடோமென்று கண்டிப்பாகவே பேசினேன். ஆனால் மக்கள் நடந்துகொண்ட முறையைக் கண்டு ஏன் அவ்வாறு பேசினோம் என்று வருத்த முற்றேன். நம்மிடையே இருக்கும் வகுப்புவாதம் வேறு. அவர்களிடையே உள்ள வகுப்பு வாதம் வேறு. வகுப்பு வாதமென்பதையே அறியாத ஒரு பெரும் இனத்தை "வகுப்புவாத" மென்று ஒரு சிறு கூட்டம் அழைப்பது தான் எனக்கு வியப்பாக இருக்கிறது.

சென்னையில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் வலுவடைகிறது; அதற்கு காரணமென்ன என்று நீ அடிக்கடி எழுதியது எனக்கு நினைவிருக்கிறது. அவ்வியக்கம் வலுவடையக்காரணமென்ன என்று எனக்குச் சென்னை சென்று மீண்ட பிறகு தான் தெரிந்தது. பார்ப்பனர்கள், ஆமாம் நம்மவர்கள் தான், ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது. சென்னையில் உள்ள இந்து பத்திரிகை காரியாலயத்திற்குச் சென்றிருந்தேன். எடுபிடி ஆட்களைத் தவிர எல்லோரும் பூணூல் கூட்டங்கள் தான். ஹிந்தி பிரச்சார சபையிலும் அதேமாதிரி தான். சென்னையிலுள்ள முக்கிய இடங்களிலெல்லாம், டில்லி செக்ரேட்டியரேட்டிலிருப்பது போல, ஒரே பார்ப்பன மயமாகத்தான் இருக்குமென்று தீர்மானித்துக் கொண்டேன். ஏன் அவர்கள் பார்ப்பனர்களை வெறுக்கிறார்கள் என்பது இப்பொழுதுதான் விளங்குகிறது.

ஹிந்தி பிரச்சார சபையில் தமிழ் மொழியின் தொன்மையைப் பற்றியும் தமிழ் இலக்கியங்களின் மேன்மையைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அவ்வாறு குறிப்பிடக் கூடிய நிலைமை பலவந்தமாக ஏற்படுத்தப் பட்டது. சென்னையில் இப்பொழுது இளைஞர்கள் மீது கட்டாய இந்தியைத் திணித்திருக்கிறார்கள். இந்தி எதிர்ப்பு இயக்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## இது மாபெரும் போராட்டம்!

—()●()—

இந்தி எதிர்ப்பு என்பது ஒரு மாபெரும் போராட்டமாகும்.

அதுவும் சர்வ வல்லமையும், சர்வ வசதியும் உள்ள (அதாவது ஒரு மாபெரும் கட்டுப்பாடான சுயநலப் பதவிப்பித்துக் கோஷ்டி) சர்க்காருடன் நிர்க்கதியான மதம், சமுதாயம், சுதந்தரம் சுயராஜ்ஜியம் என்னும் பேரால் ஏமாற்றப்பட்டு, மான உணர்ச்சியையும், மனிதத்தன்மையையும் அடியோடு அற்றுப்போகும்படிசெய்யப்பட்டு, தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து, எதிரிக்குத் தஞ்சமாவதின் மூலம் தான் மனிதனாக வாழ முடியுமே தவிர, மற்ற வழிகளில் வாழ முடியாத மாதிரி ஆக்கப்பட்டு பலப்பல விபீஷணர்களைக் கொண்ட ஒரு நிர்க்கதியான மக்கள் நடத்தும் போராட்டமாகும்.

இதில் நாம் துன்பப்படுவது, நசுக்கப்படுவது, நட்டப்படுவது, உடல், பொருள், ஆவி இழக்கப்படுவது என்பதல்லாமல் "எதிரி"க்குச் சிறிதும் சரீரக் கஷ்டம், தொந்தரவு, தொல்லை கொடுக்காத போர் ஆகும்.

—ஈ. வெ. ராமசாமி.

# வந்த இந்தி எதுமட்டும் வளையாதீர் !

★

“தமிழிலக்கியம் செழிப்பதா, செல்லரிப்பதா? தமிழர் வாழ்வதா, வீழ்வதா? தமிழ்நாடு இருப்பதா, இறப்பதா? சிந்தாமணியைச் சிலப்பதிகாரத்தைப் பெற்றெடுத்தமொழி சிதையவேண்டுமா, சிறப்புற்றோங்கவேண்டுமா? எம்மதத்தவரும், எம்மொழியினரும் கன்னலெனப் போற்றிடும் குறளின் ஒலி உலகிலே ஒலிக்கப்படவேண்டுமா, வேண்டாமா? கலிங்கத்துப் பரணி தமிழகத்திலே கற்கப்படவேண்டுமா, கற்பாரற்றுப் போகவேண்டுமா? ஆவியாயிருந்த இக்கோள் நீராகிப், பிறகு இன்றிருக்கும் நிலமாகி, அமீபா என்ற ஒரு செல் உயிர் தோன்றி, அவ்வுயிர் பல செல்லுயிராய், மீனாய், முதலையாய், பாம்பாய்ப் பறவையாய், மானாய், மாடாய்ப் பிறகு குரங்காய், அதன் பிறகு முதன் முதலில் தோன்றிய முதல் மனிதன் தமிழன் என்பதும், அவன் பேசியது தமிழ் என்பதும், உலகின் பல் வேறு நாடுகளில் நாகரீகம் அற்றோர் நடமாடுகையில், நலமுள்ள வாழ்க்கையொடு வாழ்ந்தவர் தமிழர் என்பதையும், மறந்திருக்கும் உலகிற்கு எடுத்துக்காட்டவேண்டுமா, தமிழினமென்றே ஒன்றிருந்ததா என்று மக்கள் அய்யுறும் நிலைவந்துற வேண்டுமா? உள்ள உரமில்லாததால் அலைகடலுக்கஞ்சிய ஆரியர், ‘கடல் கடத்தல் தோஷம்’, என்றுரைத்த காலத்திலேயே, ஏன் அதற்கும் பன்னூறு ஆண்டுகட்கு முன்னமேயே முதலைகள், திமிங்கிலங்கள், சுறாக்கள், படுபாறைகள் நிறைந்துள்ள நீர்ப்பரப்பை—நீல நிறக்கடலை—ஆழ்கடலை அச்சமின்றி நெல்லும், மிளகும், மணக்கும் பொருள்களும், வெண்ணிறத் தந்தமும் நிரம்பிய மரக்கலங்களால் உழுது சென்று உரோமரோடும், யவனரோடும் வாணிபஞ் செய்து, பொன்னும், மணியும் பெற்று நாடு திரும்பி நலமிகு மாளிகைகள் கட்டி, வளமுடன் வாழ்ந்த திராவிடர் வரலாறு, வரலாற்று ஏடுகளிலிருந்து துடைக்கப்படவேண்டுமா? நிலைபெற்று மாநில மக்களால் மதிக்கப்படவேண்டுமா? புறநானூற்றை, அகநானூற்றை எழிலுற எடுத்தோதிய தமிழ் எங்குளது? என்ற ஏக்க நிலை வந்தெய்த வேண்டுமா? பார்க்கும் இடமெல்லாம் இனிய செந்தமிழின் இனிமையுந்தொன்மையும், இலக்கியச் சிறப்பும் எடுத்து விளக்கிடும் மக்கள் நிறைந்திருக்கும் நிலை வந்தெய்த வேண்டுமா?” என்ற விதமாக என் நண்பனிடம் உரையாடத் தொடங்கியபோது, “போதும் நிறுத்து உன் பேச்சை, எதற்காகத் திராவிட இனத்துக்கே ஏதோ முடிவு வந்து விட்டது போல் பேசுகிறாய்? எதனால் நீ கூறும் திராவிட இனத்துக்கு அழிவு வரப்போகிறது”, என்று வினவினான்.

‘ஹிந்தி நுழைந்து விட்டது, கட்டாயமாகத் தமிழரும், களிதெலுங்கரும், கருநாடகரும், மலையாளத்தாரும் கற்கவேண்டிய பாடையாக. ஹிந்தி மொழியை இந்நாட்டு மக்கள் கற்றால் அவர்தம் இனப்பண்புகள் (திராவிடக் கலாச்சாரம்) மங்கி மறைந்து ஆரிய நாகரீகத்தைத் தம்மையறியாமலே மேற்கொள்ளுவர். எனவே ஹிந்தி இந்த நாட்டிலே கட்டாய பாடமாக ஆக்கப்பட்டால் திராவிட நாகர்கம் தேய்ந்து ஆரிய நச்சரவம் படம் விரித்தாட நேரிடும்’, என்றேன்.

‘ஒரு மொழியைக் கற்பதாலேயே அம்மொழி பேசுவோர்தம் நாகரீகம் வந்துறுமா?’’ என்றவன் வினவினான்.

யான் செப்பினேன்: “நண்பா, ஹிந்திமொழி சாதாரண மொழியாக இந்த நாட்டினுள் நுழைக்கப்படவில்லை. அரசியல் மொழியாக நுழைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் அலுவலகங்களில் வேலை பெறுவதற்கு ஹிந்தி தெரிந்திருத்தல் வேண்டுமென்ற அவிநாசியாரின் அறிவற்ற, மானமற்ற, உத்தரவிலிருந்து, ஹிந்தி அரசியல் மொழியாகத்தான் திணிக்கப்படுகிறது என்பது விளங்கவில்லையா? ஒரு மொழி அரசியல் மொழியாக வருமேல் அம்மொழியே மக்கள் மன்றத்திலே முதலிடம் பெறும். சொந்த நாட்டு மொழி (தாய்மொழி) இரண்டாம் இடம் பெற்று சீரழிந்து ஒழிந்து போகும்.

அரசியல்மொழியாக வரும் மொழி முதலிடம் பெறுவதால், அம்மொழி பேசுவோர் தம் இலக்கியங்களையும், வரலாற்றையும், பண்புகளையும்தான், இரண்டாம் இடத்திற்குத் துரத்தப்பட்ட தாய் மொழிபேசுவோர் கற்க வேண்டிவரும். அங்ஙனம் கற்றலால் அவர்தம் நாகரீகத்தை மேற்கொள்ள நேரிடும்—நேரிட்டுத்தான் தீரும்.

இதற்குச் சான்றாக தமிழும், தமிழருமே உளர். தீங்கனியும், தெளிதேனும், தெரிவையரின்பமும் நிகராக முடியாத பேருவகை தரவல்ல தண்தமிழை, உயிரினும் ஓம்பிக் காத்து வளர்த்தனர் இராயிரமாண்டுகட்கு முன்வாழ்ந்த தமிழர். முடிமன்னர்களும், மூதறிஞர்களும் சங்கங்கள் நிறுவிச் செந்தமிழ் வளர்த்தனர்,

## போரின் லட்சியம்!

-[★]-

மற்ற யுத்தங்களுக்குச் செல்லுபவர்களும் தங்கள் உயிரைக் கொடுக்கத்துணிந்துதான் செல்கிறார்கள் என்றாலும், அவர்களுக்கு எதிரியைக் கொல்லுவது என்கின்ற எண்ணமும் அதுவே முக்கிய லட்சியமும் ஆகும்.

ஆனால், நமது போராட்டம் அப்படியல்ல. “எதிரிக்கு”, சிறிதும் தொந்தரவு கொடுக்காமல், நமது உயிரைக் கொடுக்கவே நாம் “யுத்தத்”திற்குச் செல்லுகிறோம். ஆனதால், இந்த யுத்தத்தில் ஈடுபடும் மக்கள் ஒரு நல்ல யுத்த வீரன் எப்படித் தன் உயிருக்குத் துணிந்து யுத்தத்தில் உற்சாகமாக இறங்குகிறானோ அதுபோலவும், யுத்த வீரன் எதிரியை எப்படிக் கொல்லலாம் என்று கருதுகிறானோ அந்தப்படி சிறிதுகூடக் கருதாமலும், நம் உயிர் விடுவதன் மூலமே எதிரியை வெற்றி கொள்ளலாம் என்ற கருத்துடன் வரவேண்டும். அதாவது எல்லாத் தொண்டர்களும் திருப்பூர்க் குமரனைப் போல் சர்க்காரால், போலீசாரால் அடிபட்டுச் செத்தார் என்று ஆகவேண்டுமே ஒழிய, ஆகஸ்டு தனத்தாலோ, ஆகஸ்டு தனத்தில் வெற்றி பெற்ற காசிராஜன், ராஜகோபாலன்கள் போலவோ ஆகக்கூடாது. கண்டிப்பாக ஆகக்கூடாது.

காங்கரஸ்காரர்கள் செய்த போராட்டம் கொள்ளை அடிக்க, கொடுங்கோல், ஒழுக்கமற்ற ஆட்சி நடத்தச் செய்யப்பட்டதாய் முடிந்தது. நாம் மனிதத்தன்மைபெற, மானம் பெற நம் பல்லாயிரக்கணக்கான மக்களின் இழிவை நீக்கிக் கொள்ளவே ஆகும்.

காங்கரஸ் போராட்டம், தனிப்பட்ட மனிதனின் பித்தலாட்ட வாழ்வுக்கு. ஆனால் நமது போராட்டம் பலகோடி மக்களின் மனிதத்தன்மை வாழ்வுக்கு ஆகும்.

—ஈ. வெ. ராமசாமி.

---

அதில் திளைத்தனர், இளையவரும், முதியவரும், காளையரும், கன்னியரும், ஆடவரும், பெண்டிரும்.

தண் தமிழ்ப் பாட்டுக்குத் தலையீயத் தயங்கினானில்லை குமணன். படுத்தல் செய்யக்கூடாத முரசின் மீது படுத்துறங்குபவன் யாரென்று பார்க்க, அவனொரு தமிழ்ப் புலவனாயிருக்க, சினங்கொள்ளாது, விசிறி

கொண்டு காற்றசைத்துப் புலவனின் களைப்பையாற்றினான் ஒரு தமிழ் மன்னன். பசுந்தமிழ்ப் பாட்டுக்குப் பல்லாயிரம் பொன்னளித்தான் கரிகாலன். 'பரிசில் வழங்கி விட்டால் வந்தவள் போய்விடுவாள். வண்தமிழின் இன்பமதை மாந்துதல் இயலாமல் போய்விடுமே! என்றெண்ணி தமிழரசி ஔவைமூதாட்டிசினக்கும் வரை பரிசில் வழங்காதிருந்தான் பாரி வள்ளல். 'நெடுநாள்யாணிருந்தடையும் பயன்யாது என்றெண்ணி, கிடைத்தற்கரியதும், ஆயுள் வளர்ப்பதுமாகிய நெல்லிக்கனியை — அறிவுச்சுடரை— நீதியை, சோ்மையைத் தமிழால் தமிழ் நாடெங்கணும் பரப்புதற்காகஔவைக்கீந்தான் அதியமான். இங்ஙனம் மன்னர்களாலும், மற்றையோராலும் மதிக்கப்பட்டு, இல்லை, உயிரெனப்போற்றப்பட்டு அரசபீடத்திலமர்ந்து ஆட்சி புரிந்தது தமிழ். எனவே அது தழைத்து, வளர்ந்து, செழித்தோங்கியது. அங்ஙனம் ஓங்கியதால் தமிழரும் ஓங்கினர். அவர்தம் கொடிகளும் பறந்தன பார்த்திக்கெல்லாம். காதல்கனிந்து குலுங்கியது, ஒழுக்கம் ஓங்கி வளர்ந்தது. மானம் வானமளாவியது. வீரம் கொழித்தது, அது கடாரத்தைக்கடாவியது; வடாஅது பனிபடுமலையை வளைத்தது; கங்கையைக் காலடியில் கொணர்ந்தது; ஈழத்தை ஈர்த்தது; கலிங்கரைக் கலங்கச் செய்தது.

அத்தகைய வீரப்பரம்பரையினர் இழிசாதிமக்களாக ஆனதெவ்வாறு? வளமுடன் வாழ்ந்த அவர்கள் வறண்டு வாடுவதேன்? நாடாண்ட இனம் நலிந்துபோனதேன்? ஆரியராம் கனகவிசயரை வென்று கல்சுமக்கச்செய்த செங்குட்டுவன் வழிவந்தோர் ஆரியரைப் பூதேவரெனப் போற்றி வணங்குவதேன? எல்லாம் வடமொழியின் நுழைவால். வந்த ஆரியர் தம் சொந்த மொழியாம் வடமொழியைக் கடவுள் மொழி என்று புகன்றனர். மற்றமொழிகள் நரமொழிகள் என்றனர். அதை நம்பினர் தமிழர். நம்பியதால் சூழ்ந்தது கேடு. தாம் பேசும் தமிழ்மொழியினும் சமஸ்கிருதம் சாலச்சிறந்தது, மாண்புடைத்தது என்று கருதலாயினர் தமிழர். எனவே தமது தமிழிலக்கியங்களை மறக்க ஆரம்பித்தனர். முதலிடம் பெற்ற வடமொழி இலக்கியங்களைப் பயில ஆரம்பித்தனர். அங்ஙனம் பயில்பவனே அறிஞன், புலவன் என்று கருதப்படலானான். அங்ஙனம் தமிழர் ஆரியர் இலக்கியங்களை, அதாவது பொய்யுருவாம் புராணங்களைப்போற்றிக்கற்கவே, ஆரிய நாகரிகம் அவரிடையே (தமிழரிடையே) பரவ ஆரம்பித்தது. சிலநூற்றாண்டுகளில் தமிழர் தம்மினப்பண்பெலாம் மறந்து ஆரிய நாகரீத்தவராயினர். சுமார் ஆயிரமாண்டுகளாகத் தமிழர் ஆரிய நாகரீகத்தோடுதான் இருந்து வருகிறார்கள்.

தமிழர் ஆரியமயமானதால் தமிழ்ப் பண்பாடுகள் சிதைவுற்றுச் சீரழிந்ததைச் சிறிதெடுத்து விளக்குகிறேன். தமிழர் தமிழராக வாழ்ந்தபொழுது, அதாவது ஆரிய நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளாதிருந்தபொழுது, 'உன் மகன் எங்கே', என்று வினவ, புலியிருந்து போன குகை இதோ', என்று தன வயிற்றைச் சுட்டி, 'மகனைச் செருக்களத்தில் காணலாம்', என்றுரைத்த மகளின் மாவீரத்தையும்; தன் மகன் அமர்க்களத்தில் முதுகில் அடிபட்டு மாண்டான் எனக் கேள்வியுற்ற தாய், மானத்தால் மனம் பொறாளாய், 'முதுகில் அடிபட்டு மாண்டிருந்தால் அவனுக்குப் பாலூட்டிய என் முலைகளை அறுத்தெறிவேன்,' என்று வீரவுரை பகர்ந்து, வாளொடு செருக்களம் சென்று, வாளினாலேயே புரட்டிப் புரட்டிப் பார்க்கத் தன் மைந்தன் மார்பிலே புண்ணுண்டு மாண்டதைக்கண்டு, ஈன்ற ஞான்றினும் மகிழ்ச்சி மிகவெய்திய மாதரசியின் மானத்தையும், மாவீரத்தையும் வீரத்துக் கெடுத்துக் காட்டாக விளக்கினர். ஆரிய மயமான பின்னர், மறைந்திருந்து வாலியைக் கொன்ற இராமனை, பேடியை மாவீரனென்றழைக்கலாயினர்.

தன் கணவன் இறந்தான் என்று கேள்வியுற்றதுமே, அவன் மீது கொண்ட அளவிறந்த காதலால் தானும் அந்நொடியிலேயே உயிர் நீத்த பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவியைத் தலையாய கற்புக்கோர் எடுத்துக் காட்டாகக் கொண்டனர் அன்று வாழ்ந்த தமிழர்—அதாவது தமிழராக இருந்த பொழுது. பிறகு ஆரியப்பண்புகளை மேற்கொண்டதும், அய்ந்து கணவர்களோடு புணர்ந்து இன்பம் துய்த்தும், காமம் கரைபுரண்டோட, ஆறாவது ஆடவன் மீதும் ஆசைவைத்த பாஞ்சாலியைப்பரம பதிவிரதை என்று போற்றுவாராயினர்.

'உள்ளத்தால் உள்ளலுந்தீதே
பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேமெனல்'
'பொய்யாமை பொய்யாமை
யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று'

என்று உள்ளத்தாலும் களவாட நினைத்தலே தீதெனும் உயரிய பண்புடன் அன்றையத்தமிழர் வாழ்ந்தனர். ஆதலால் தான் களவாடுவோனுக்கு தண்டனைகளுள் தலையாயதும் இறுதியானதுமான மரண தண்டனையையே அன்றைய ஆட்சி விதித்தது. இவ்வுண்மை கோவலன் சரிதத்தால் புலனாகிறது. அத்தகைய சீரிய தமிழர் பிறகு, 'சூத்திரனுக்கென்றொரு சொத்தும் கிடையாது. ஏனெனில் அவன் பிராமணர்களுக் குழைக்கவே பிறந்த அடிமை. அடிமையின் சொத்து ஆண்டவனைச் சேருமாதலால் பிராமணன் சூத்திரனின் சொத்துக்களை எடுத்துக் கொள்ளலாம்', என்று களவாடுதலைச் சரியெனப் புகலும் மனுநீதியே நன்நீதியெனக் கொண்டனர். ஆதலால் தான் வெண்ணையையும், பெண்ணையும் களவாடிய கண்ணனைக் களங்கமில்லாக் கடவுளெனப் போற்றுவாராயினர்.

அன்றையத் தமிழர்—சங்க காலத்துத் தமிழர்,

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில்
வேற்றுமையான்,'
'யாதும் ஊரே யாவருங் கேளிர்,'

என்ற உயரிய கொள்கைகளால் ஒன்றுபட்டிருந்தனர். மக்களாக வாழ்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# ஆகஸ்டு தனம் தோல்வியே தரும்!

இதைத் தொண்டர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் போராட்டத்தில் ஒரு காரியம் கூட காங்கரஸ்காரர்கள (ஆரியர்கள்) நடத்திய தன்மையை எண்ணத்தில், மனத்தில் கொள்ளக் கூடாது. திராவிடர் கழகம் இந்தப் பத்து ஆண்டுகளாக நடந்து வந்த தன்மையை, போதித்து வந்த நடத்தையை மனதில், பேச்சில், செயலில் கொண்டு நடந்துகொள்ள வேண்டும். காங்கரஸ்காரன் அல்லது காங்கரஸ் சர்க்கார் அல்லது காங்கரஸ் சர்க்கார் சிப்பந்தி நம்மைக் கொடுமைப்படுத்துவது தனது வாழ்வுக்கு அல்லது வயிற்றுப் பிழைப்புக்கு ஆதலால், அவர்களுக்குப் பல அட்டூழியம் செய்ய உரிமை உண்டு.

நாம் அட்டூழியத்தால், யோக்கியக் குறைவால் வாழவேண்டுமென்று கருதினால், அந்தக்கோஷ்டியில் சேர்ந்து அவர்களை விட உயர்ந்த அல்லது அவர்களைப் போன்ற வாழ்வு வாழலாம். ஆனால், நாம் உலகுக்கு உண்மை ஒழுக்கத்தை, ஒழுக்கப் போராட்டத்தில் ஒரு மனிதன் வாழ முடியும், வெற்றிபெற முடியும் என்பதை எடுத்துக்காட்டப் போராட்டம் நடத்துகிறோம். நாம் வெற்றிபெற்றே தீருவோம். காங்கரஸ் தனம் அல்லது ஆகஸ்டு தனம் என்பது தோல்வி அடைந்தே தீரும். அடைந்தே வருகிறது.

—ஈ. வெ. ராமசாமி.

...ச்சி நூலக அறக்கட்டளை

கதை கற்பனை.

சிறுகதை

முதற்பருவம்.

# இலட்சிய வாதி

போட்டி

எண் 10.

“கமலா! நான் சென்று வருகிறேன் விடைகொடு”

“நாதா! எத்தனையோ ஆயிரமாயிரம் புறங்கொடா வீரர்களும் வீராங்கனைகளும் வாழ்ந்து வரும் நம் திராவிட நாட்டில், நீங்கள் ஒருவர் மட்டும் இக்காரியத்தில் தலையிட்டுக் கொள்ளாவிட்டால், இத்திராவிட நாடே செயலற்று நின்று விடுமா?”

“கண்ணே! நீ சொல்வது தவறு. நீ எனக்குக் கூறியபடி, இத்திராவிட நாட்டிலிருக்கும் ஒவ்வொரு திராவிடப் பெண்மணியும், தத்தமது அன்பிற்குரியருக்குக் கூறி இக்காரியத்தில் ஈடுபடாதபடி தடுத்து நிறுத்திவிடுவார்களானால் நம் திராவிட நாடு என்ன ஆவது? உன்னைப் போல் அவர்களுக்கும் தத்தமது அன்பினாளரின் மேல் ஆசையிருக்காதா? சிந்தித்துப்பார்”

“அன்பரே! தங்களுக்கு ஏதாவதொன்று நேர்ந்து விட்டால் என் கதி.........?”

“வீரத்தியாகி குணசீலனின் மனைவி என்ற புகழால் பெருமிதம் கொள்வாய்”

“அப்படியானால் உங்கள் எண்ணத்தை மாற்றவேமாட்டீர்களா?”

“மாற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். என்னைப் போலவே ஒவ்வொரு இலட்சியவாதிக்கும் உலகப் பற்று, பாசம் எனும் இடர்கள் ஏற்படுவதுண்டு. அவைகளை யெல்லாம் கடந்து சென்று, தன் இலட்சிய நாடகத்தை உலகப் பொதுமேடையிலே நடத்தி, அதில் தானே கதாநாயகனாகவும் வருகின்றவனே இலட்சிய வாதி. அவன் வாழ்வு சுதந்தர வாழ்வு. அவனை எதுவும் கட்டுப் படுத்தவும் முடியாது”

“அப்படியானால் நானும் தங்களுடன் வருகிறேன்”

“எதற்கு? பண்டைத் திராவிட வீராங்கனைகளின் தீரத்திற்குக் களங்கம் விளைவிக்கவா? எப்போது உன் தேகத்தில், நம் திராவிடக் கலாச்சாரத்திற்கு—உயிரினுமினிய நம் தமிழ் மொழிக்குமூறுவிளைவிக்கின்றனர் அரசியலார் என்று தெரிந்தவுடன், உன் திராவிட இரத்தம் கொதிக்கவில்லையோ, உடல் துடிக்கவில்லையோ, அப்போதே நீ நம் பண்டைத் திராவிட வீராங்கனைகளின் தீரத்திற்குக் களங்கம் விளைவித்து விட்டாய். இன்னும் என்னுடன் வந்து என் வீரத்திற்கும் களங்கம் விளைவிக்கவா நினைக்கிறாய்? வேண்டுமானால் நீ திராவிடப் பெண்களை ஒன்றுதிரட்டி, அவர்களுக்கு நீயே தலைவியாய், நாம், போரிடவேண்டிய களத்திற்குச் சீக்கிரமே வா. நான் சென்று வருகிறேன்”

குணசீலன் வெளியே சென்று விட்டான். அதிகாலை! இன்னும் கிழக்கு வெளுக்கவில்லை. கமலாவுக்கு துக்கம் நெஞ்சை அழுத்தியது—அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. ஓடிப்போய் வெளிக்கதவைத் தாழிட்டுவிட்டு படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டாள். அவள் தலைசுற்றியது. ஒரே மயக்கம்! கண்கள் தாமே மூடிக் கொண்டன.

* *

அன்று ஆகஸ்டு 10. ஆம்! அன்று தான் இந்தி எதிர்ப்பு முயற்சியில் செயவாற்றத் துவங்கினர் கருஞ்சட்டை வீரர்கள். வீரர்களில் ஒருவன் தான் குணசீலனும். குணசீலன் திராவிடன்-தன்மானத் தமிழன்—பகுத்தறிவு வாதி, இலட்சியவாதியுங் கூட. தளபதி அண்ணாதுரையின் தலைமையில் ஒன்று திரண்டனர் ‘வெட்டிவா என்றுரைத்தால் கட்டிவரும் வீரர்’ அறப்போர் தொடுக்க. ஆகவே குணசீலனும் தன்னுரிமைப் போருக்குக் கிளம்பினான். அவனது மனைவி கமலாவிடம் விடை கேட்டான்; அவள் மயங்கினாள். அவர்களிருவருக்கும் மணமாகி ஒருவார காலம்தான் ஆகியிருந்தது. ஆனாலும் அவன் சற்றும் தயங்கவில்லை. அவன் தான் இலட்சிய வாதியாயிற்றே! உடனே புறப்பட்டுச் சென்றான், நம்மை யீன்ற தமிழன்னையின் உடலைச் சிதைக்க—இலக்கிய அணிகளைக் கவர—திராவிடக் கலாச்சாரக் கற்பைச் சிதைக்க வரும், கல்வி வளமில்லாக் கயவனாம் இந்தியை ஒழிக்க. வழியில் நம் தமிழன்னையினை இந்திக் கயவனுக்குக் காட்டிக்கொடுத்த தமையனாம் அவினாசியாரைக் கண்டான் இந்தி மூடனுடன் கைகோத்து வரும் நிலையில். வெட்கித் தலைகுனிந்தான். அவரோ.........?

* *

எங்கும் கருஞ்சட்டை வீரர்கள் கடலென அமர்ந்திருந்தனர். இந்தி கற்கச் செல்லும் மாணவர்களைச் சமாதான முறையில் மறியல் செய்து தடுப்பதற்காகத் தொண்டைமண்டலம் உயர் நிலைப்பள்ளியின் முன்பு அமர்ந்திருந்தனர் அவர்கள். அதோடு குணசீலன் முக்கிய பங்கெடுத்துக்கொண்டு முதன்மையாக முன்னின்றான். மாணவர்கள் பள்ளிக்கு வந்தனர் இந்தி மொழி கற்பதற்காக. தொண்டர்கள் அம்மாணவர்களுக்கு அறிவுரை பகன்று இந்தி வகுப்பிற்குச் செல்ல வொட்டாது தடுத்தனர். உடனே பள்ளி அதிகாரி போலீஸுக்குத் தகவல் கொடுத்தார். உடனே எங்கிருந்தோ நாலைந்து போலீஸ்லாரிகள் அலறியடித்துக் கொண்டுவந்து கூட்டத்திற்குச் சமீபமாய் வந்து நின்றது. அதிலிருந்து ‘திடும், திடும்’ என ஏராளமான மலபார் போலீஸ்க்காரர்கள் குதித்து கூட்டத்தைச் சுற்றி ஓடிவந்து நின்றனர். அவர்களுக்கெல்லாம் பின்னால் காக்கி உடைதரித்த தடித்த போலீஸ் அதிகாரி ஒருவர் மிடுக்கு நடை போட்டுக் கூட்டத்தின் முன்பு வந்து நின்று, அதிகார தோரணையுடன்கூட்டத்தை ஓர் முறை பார்த்துவிட்டு, பின்னர் அங்கு பள்ளிக்குச் செல்லும் மாணவர்களை நியாயமான அறிவுரை புகன்று தடுத்து நிறுத்திக்கொண்டிருந்த குணசீலனை நெருங்கி, ஓர் காகிதத்தை எடுத்து அதில் கையெழுத்துப்போடச் சொன்னார். அவ்வளவில் அங்கு கூடியிருந்த அத்தனை மக்களும் ‘இந்தி ஒழிக’ ‘தமிழ் வாழ்க’ ‘வடநாட்டு ஆதிக்கம் ஒழிக!’ திராவிடக் கலாச்சாரம் வளர்க’ என ஆர்ப்பரித்தனர். எங்கும் ஒரே பரபரப்பாக விருந்தது. இதைக் கண்ட போலீஸ் அதிகாரி கூட்டத்தின் முன்பு வந்து நின்ற “இம்மறியலையும், கூட்டத்தையும் இப்போதே கலைத்தாக வேண்டுமாதலால், எல்லோரும் அமைதியாய் வீட்டுக்குச் சென்று விடுங்கள். இல்லாவிட்டால்......” என்று கூறி முடிப்பதற்குள் பொதுமக்கள் குழப்பம் விளைவித்தனர். அதில் முக்கியமாகக் கதர்ச்சட்டைக்காரரும், பொது

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

## தோழர்களே!

இதற்கு முன் 9 கதைகளையும் படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 3 கதைகள் பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

# செய்தியும்—சிந்தனையும்.

★

● எந்தத் துறையாயிருந்தாலும் சரி! வேலை செய்வதற்கு அவனுக்குச் சுதந்தரம் கொடுங்கள். அவன் செய்யும் வேலையைப் பரிசோதிக்க வேண்டுமென்று, நீங்கள் விரும்பினால், தவறுகள் மிகவும் அதிகமாகும் வரையில் பொறுத்திருந்து பிற்பாடு அவைகளைப் பரிசோதனை செய்யவும். ஆரம்பத்திலேயே வேலையைப் பரிசோதனை செய்யக் கூடாது.

இந்திய யூனியன் பிரதமர்.

இது ஆலோசனை கூறும் குரலா? ஆணையிடும் குரலா? வேலை செய்வதற்குச் சுதந்தரம் கொடுக்கலாம். ஆனால் தவறுகள் செய்வதற்கும், செய்துகொண்டே போவதற்கும், தவறுகள் பொறுக்கமுடியாத அளவுவரும் வரையிலும், எப்படிச் சுதந்தரம் கொடுக்க முடியும்? வேலைக்குச் சுதந்தரம் தருதல் விவேகம், அதுமட்டுமல்ல முறையுங்கூட. ஆனால் தவறுக்குச் சுதந்தரம் தருதல் தருக்கும் அறியாமையுமே; இந்தப் போக்கு வளர வேண்டுமென்றா இம் மகானுபாவர் விரும்புகிறார்?

● விரோத மனப்பான்மை கொண்ட அந்நியரின் நிர்வாகத்தை நமது தேசீய இயக்கம் சமாளித்து நின்றபோது அது முற்றிலும் வேறு விஷயம். அப்பொழுது நாம் செய்ய முடிந்ததெல்லாம் சர்க்காரை எதிர்ப்பதுதான். இப்பொழுது நாம் சுதந்தரமடைந்த பிறகும் இந்த எதிர்ப்பான போக்கை விரும்புவது நல்லதல்ல.

இந்திய யூனியன் பிரதமர்.

விரோத மனப்பான்மை கொண்ட வடநாட்டு அந்நியரின் நிர்வாகத்தை-அந்நிய அடிமைகளின் நிர்வாகத்தை சமாளித்து நிற்கும் திராவிடக் கழகப் போக்கைக் கண்டு மட்டும் பிரதமர் ஏன் கண்களை மூடிக்கொள்ளுகிறார்?

● பாஷை பிரச்னை பற்றி நாட்டில் ஏதோ தர்க்கம் நடந்து வருகிறது. மேலிருந்து எதையும் கட்டாயமாகத் திணிப்பதில் பிரயோசனமில்லை. உயிருள்ள பாஷை எதுவும் மக்களின் பொதுவாழ்வில் ஒரு பகுதியாக இருக்கவேண்டும்.

இந்திய யூனியன் பிரதமர்.

ஏதோ தர்க்கம் நடந்து வருகிறதாம்! ஆட்சித் திமிர் கண்களை மறைக்கும் என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு. நேர்மையையும், ஜனநாயகப் போக்கையும் விரும்பும் பிரதமராயிருந்தால், இவர் கூறுகிற இலக்கணப்படி பொதுவாழ்வில் ஒரு பகுதியாக இல்லாத—தென்னாட்டவரின் வாழ்வுக்கே உலைவைக்கக்கூடிய இந்தியை, கட்டாயமாகத் திணியாதீர் என்றல்லவா தன் அடிமைகளுக்கு வெளிப்படையாகக் கூறியிருக்கவேண்டும்? இனியாவது அப்படிச் செய்வாரா?

● தேரழுந்தூர் கம்பர் மேடு

தங்கம் வெள்ளி நாணயங்கள் அகப்படுகின்றனவாம்.

செய்தித் தலைப்பு.

தன்னினத்தைக் காட்டிக் கொடுக்கும் கொடாரிக் காம்பு, தான் செத்தொழிந்தாலும் சாகாத பெருஞ் செல்வத்தைத் தன் வாழ்நாளில் திரட்டலாம் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமென்று வேதரத்னம் கம்பெனி பேசிக்கொள்கிறதாம்.

● திருநெல்வேலி டவுனிலிருக்கும் பிரதான பெருமாள் கோவிலான கண்ணைக் கொடுத்த ஸ்ரீ கரிய மாணிக்கப் பெருமாள் கோவிலில் பல பக்தர்களின் பண உதவியின் பேரில் போடப்பட்டிருககும் மின்சார விளக்குகளை நேற்று திறந்து வைக்கப்பட்டன.

செய்தி.

கண்ணைக் கொடுக்கும் பெருமாளுக்கு, பக்தியினால் கூட அல்லாமல் பணத்தினால் மின்சார விளக்குப் போட்டார்கள் பக்தர்கள் என்றால், இதற்குப் பெயர் எட்டிக்குப் போட்டி அல்லாமல் வேறு என்ன? மற்றவர்களுக்குக் கண்களைக் கொடுக்கிற எனக்கு, இவர்கள் விளக்குகளைப் போட்டு, அந்த வெளிச்சத்தில் நான்டால் அடித்துக் கொண்டிருப்பதா? என்ன? என்று அறிவும் மானமுமுள்ள பெருமாளாயிருந்தால் ஒரு கணம் எண்ணியிருக்க மாட்டாதா?

● நேற்று சிந்தாதிரிப்பேட்டையில் கண்டு பிடிக்கப்பட்ட விக்கிரகம் அனுமான் விக்கிரகம் அல்ல என்றும், தலையும் கையுமில்லாத ஒரு அம்மன் விக்கிரகமென்றும் இன்று தெரிய வருகிறது.

செய்தி.

நாளைக்கு அது வேறு பெயர் பெற்றாலும் பெறலாம். எந்த விக்கிரகமாய் இருந்தாலும் அதற்குச் சில பக்தர்கள் முளைக்காமலா போய் விடுவார்கள்? என்றும், அதைக் காரணமாக வைத்துக் கொண்டு ஏன் ஒரு சுரண்டல் இயந்திரசாலையை (கோவிலை) அங்கே கட்டக்கூடாதென்றும், பலமான விவாதம் சுரண்டல் அட்டை (பார்ப்பனப்பூசாரி) களிடையே நடப்பதாக நம் அந்தரங்க நிருபர் அறிவிக்கிறார்.

● நேருஜியைப் பார்க்கும்போது அவருக்கு 59 வயதாகிறது என்று யாரும் சொல்லவே மாட்டார்கள். எப்போதுமே அவருக்கு மெலிந்தசரீரம், ஆனால் அதற்குள் எவ்வளவு சக்திதான் அடங்கியிருக்குமோ தெரியவில்லையே! ஜவஹர் எப்போதுமே சுறுசுறுப்புக்குப் பேர் போனவர் அந்தச் சுறுசுறுப்பு அவரிடம் இப்போதும் குறையாமல் குடி கொண்டிருக்கிறது.

ஒரு பத்திரிகையின் வருணனை.

எப்போதும் விடாமல் நானும் "சாம்பியன்ஜின்" குடித்துக் கொண்டு வந்தால் எவ்வளவோ சுறுசுறுப்பாகத்தான் இருப்பேன். ஆனால் என் தலை எழுத்து அப்படி இல்லையே என்கிறார் இதைப் படித்துப் பார்த்த ஒரு மாஜிக் குடிகாரர்.

● இந்துஸ்தானியில் பாண்டித்யம் பெற்ற ஸ்ரீ குமரகுருபரர்.

சிங்கத்தின் மீது ஏறி அவுரங்க சீப்பைச் சந்திக்கச் சென்றார்.

தினமணியில் ஒரு தலைப்பு.

இந்துஸ்தானி கற்றால் சிங்கச்சவாரி செய்யலாம் என்பது இதன் கருத்தா? கொடிய சிங்கத்தையும் அடக்கிவிடும் பேராற்றல் இந்துஸ்தானிக்கு உண்டு என்பதுதானே இதன் கருத்து? சிங்கமே இந்துஸ்தானியைக் கேட்டுக் கதிகலங்குமென்றால் செந்தமிழன் இந்துஸ்தானியை வெறுப்பதைக் கண்டு மட்டும் ஏன் வெறுக்கவேண்டும்? மடத்தாசாமி பேரைச் சொல்லி, மதமகாத்மியங்களை இடையே புகுத்தி, இந்தி நுழைப்புக்கு வஞ்சக ஆதாரங்கள் காட்டப்படுகிறதே தவிர நியாயமான காரணம் யாராலும் சொல்லப்படுவதில்லையே? ஏன்? குமரகுருபரர் இந்துஸ்தானியைக் கற்றார், சிங்கத்தின் மீதேறினார் என்றே வைத்துக் கொள்வோம். அவருக்கு யார் இந்துஸ்தானியைக் கற்றுக் கொடுத்தது? தேவையானால், தானே கற்றுக் கொள்வான் தமிழன்; அதுவும் அதில் சிறப்புமடைவான் என்பதுதானே இந்த வரலாறு (உண்மையோ-பொய்யோ) உணர்த்தும் உண்மை. இது எப்படி இந்தி நுழைப்புக்கு ஆதாரமாகி விடும் என்பதைப் பார்ப்பனவர்க்கம் உணருமா?

★

நமது தாய்மார்களைச் சூத்திரச்சிகளாக, நமது ஆடவர்களைச் சூத்திரர்களாக, நமது பழங்குடி மக்களைப் பஞ்சமர்களாக சண்டாளர்களாக, நமது கிருஸ்துவத் தோழர்களையும் முஸ்லிம் தோழர்களையும் மிலேச்சர்கள் ஆக வைத்திருக்க செய்யப்படும் சூழ்ச்சிதான் இது.

பெரியார்

ரோஜா முத்தையா

# மறியலுக்கு முதல் நாள்— : :
# : : மந்திரிகளுக்குத் தெளிவுரை

## பெத்துநாய்க்கன் பேட்டையில் பெரியார் கர்ஜனை.

[நமது தனி நிருபர்]

சென்னை, 9—10—48.

இன்று மாலை 6-மணிக்கு இவ்வூர் பெத்து நாய்க்கன் பேட்டைச் சிவஞானம் பார்க்கில் சென்னை மாவட்டத் திராவிடக் கழகத் தலைவர் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் மாபெரும் ஹிந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது. பார்க்கிலும், பார்க்கின் சுற்றுப்புறத்திலும் சுற்றுப்புற வீடுகளின் மாடியிலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்து ஹிந்தி எதிர்ப்புப் போர் முரசொலி முழங்கக் கேட்டனர். பெரியார் அவர்களும், ஹிந்தி எதிர்ப்பு முதல் சர்வாதிகாரியாக இருக்கும் வாய்ப்புப் பெற்ற தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். இடை இடையே சிறுதூற்றல் இருந்துகொண்டிருந்ததென்றாலும் மக்கள் மிக அமைதியாக இருந்து மேற்படி சொற்பொழிவுகளைக் கேட்டனர்.

தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தைச் சுருக்கமாக எடுத்துக்கூறி தோழர் என். ஜீவரத்தினம் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளவும் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையேற்று, கட்டாய ஹிந்தி மூலம் தமிழ் நாட்டைக் கெடுக்கவரும் ஆரியக்கலாச்சாரப் படையெடுப்பை முறியடிக்க, போர் துவக்கப்படுகிறதென்றுகூறி தலைவர் பெரியார் அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

பெரியார் அவர்கள் பேசியதாவது:-

''அன்புமிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்தக்கூட்டம் நாளை இச்சென்னையில் நடைபெற இருக்கும் ஹிந்தி எதிர்ப்பு மறியலைக் குறித்து மக்களுக்கு விளக்கிக்கூறுவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டமாகும். இந்நாட்டில் அதுவும் இச்சென்னைமாநகரில் ஹிந்தி எதிர்ப்பைக்குறித்து யாருக்காவது விளங்கவைக்கவேண்டுமென்றால், சென்ற 10 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்திராத குழந்தைகளுக்கும், அன்று விளக்கம் தெரியாது விபரம் தெரியாது இருந்த குழந்தைகளுக்கும் தான் சற்று விளக்கம் கூறவேண்டியிருக்குமே ஒழிய, மற்றையோருக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. காரணம் அவ்வளவு விளக்கமாக அன்று நாம் ஹிந்தி எதிர்ப்பின் அவசியத்தைப்பற்றிப் பேசியிருக்கிறோம் என்பதால் தான். சென்ற 10 ஆண்டுகளுக்கு முந்தி இதே ஹிந்தி மொழி மூலம் நமது திராவிட மொழிக்கும், திராவிடக் கலாச்சாரத்திற்கும், திராவிட மக்களுக்கும் வரநேர்ந்த ஆபத்தைத் தடுக்கவேண்டுமென்று நாம் ஒரு போராட்டத்தை இதே சென்னையில் நடத்தி வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதால் தான். அக்காலத்தில் ஏற்பட்ட ஆபத்துக்கும், இக்காலத்தில் ஏற்பட்டுள்ள ஆபத்துக்கும் பல வேற்றுமைகள் உண்டு. ஏதாவது கடினமான காய்ச்சலைப்பற்றிக் கூற வேண்டுமானால், இக்காய்ச்சல் மிக ''விருலன்ட் பாரத்தில்'' அதாவது மிகக் கொடூரமான, வேகமான, ஆபத்துக்கிடமான தன்மையில் வந்துள்ளது என்று கூறுவார்கள். அதேபோல் நமது கலாச்சாரத்திற்கு இன்று வந்துள்ள ஆபத்து முன்னைவிட சற்று கடினமான, சற்று தொந்தரவான தன்மையில் வந்துள்ளது.

### பழைய இந்தி நுழைப்பு!

10-ஆண்டுகளுக்கு முன்பு இன்று கவர்னர் ஜெனரலாக இருக்கும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதன்மந்திரியாய் இருந்த காலத்தில், இதே ஹிந்தி கட்டாய பாடமாகக்கூட அல்ல, இஷ்டபாடமாக வைக்கப்பட்டது. அதுவும் மாகாணம் பூராவுக்கும் 40-அல்லது 50-பள்ளிகளில் மட்டுமே பாடமாக வைக்கப்பட்டது. அன்று அதைக்கூட நாம் எதிர்த்தோம். நமது எதிர்ப்பின் வலிவைக் கண்டதும், இந்தியை இஷ்டப்பட்டுப் படிப்பவர்கள் கூட, இஷ்டப்பட்டாலொழிய பரீக்ஷைக்குப் போகவேண்டாம், சென்றாலும் தேறவேண்டிய அவசியமும் இல்லை என்று கூறப்பட்டது.

எதிர்ப்பு வளரவளர ஏதோ 100-வார்த்தைகளாவது ஹிந்தியில் ஒருமாணவன் தெரிந்து கொண்டால் போதுமானது என்று கூறப்பட்டது. கடைசியாக ''இவ்வளவு அதிருப்தி மக்களுக்கு இருக்குமென்று தெரிந்திருந்தால் நான் இந்த மொழியைப் புகுத்தியே இருக்கமாட்டேன்'' என்று அவரே கூறும்படியான நிலைகூட ஏற்பட்டது. கடைசியில் இவ்வாறு கூறுமாறு செய்யப்பட்ட அவா, முதல் முதலாக ஹிந்தி எதிர்ப்புப்போர் துவக்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## பெருமக்களுக்கோர் எச்சரிக்கை!

இந்தி எதிர்ப்புப் போர் நடக்கிறது. பார்ப்பனப்பத்திரிகைகள் போர் விஷயங்களை மறைத்து, திருத்திப் பொய் கற்பனை செய்யச் செய்து பித்தலாட்டங்களை அள்ளி இறைக்கும். முன்பு தொழிலாளர்கள் முதலிய வேலை நிறுத்தங்களின் போது செய்த யோக்கியமற்ற காரியங்களைச் செய்யும் (அதைத் தடுப்பதற்குத் தனிப்பட்ட போராட்டம் வேண்டும்.)

ஆதலால் உண்மை நடவடிக்கைகளை அறிய ஆசைப்படும் மக்கள் பார்ப்பனப் பத்திரிகைகளில் வருவதை நம்பி விடாதீர்கள்.

காங்கரஸ் போர்வையில் இருக்கும் திராவிடர் பத்திரிகை, தங்கள் கட்சி மந்திரிகளைக்காப்பாற்றவும் பார்ப்பனர்கள் தொல்லையில் இருந்து சமாளிக்கவும் அவைகளும் பார்ப்பனீயத்தைக் கையாள வேண்டி இருக்கும். முஸ்லிம் பத்திரிகைகளும் சர்க்காரின் புலிப் பாய்ச்சல் கொடுமைக்குப் பயந்து ஒளிய வேண்டி இருக்கும். ஆதலால் திராவிடக்கழக சார்பு உள்ள பத்திரிகைகளைப் பார்த்து முடிவு செய்யுங்கள்.

தூத்துக்குடி மகாநாட்டைப் பார்ப்பன—காங்கரஸ் பத்திரிகைகள் எப்படி இருட்டு அடித்தன? மற்றும் பல முக்கிய நடவடிக்கைகளை எப்படித் திருத்திக் கூறின? ரயில்வே தொழிலாளர், பக்கிங்ஹாம் மில் தொழிலாளர் முதலிய ஸ்ட்ரைக்குகள் பற்றி எப்படித் திரித்துக் கூறின? இவைகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

—ஈ. வெ. ராமசாமி.

# குடி அரசு

14—8—48 சனிக்கிழமை.


## ஓமந்தூராரும் ஏமாந்தார்!

போர் ஆரம்பமாகிவிட்டது! ஆம், பார்ப்பனீய ஆதிக்க சர்க்காரின் அடக்கு முறைத் தாண்டவத்தாலும், தென்னாட்டு மக்களை நிரந்தர அடிமைகளாகவே இருக்கச் செய்வோம் என்கிற கன்மூடி தர்ப்பாராலும் மனம் நொந்து, வாழ்வதா? சாவதா? என்கிற பிரச்னையை எப்போதுதான் முடிவு கட்டுவது என்று ஏக்கத்துடன் காத்திருந்த திராவிட இனம், முன்பு குறிப்பிட்டிருந்தபடி இந்த மாதம் 10-ம் நாள் சென்னை தொண்டைமண்டல உயர்நிலைப் பள்ளி முன்பு இந்தி எதிர்ப்பு மறியலைத் தொடங்கிவிட்டது. அதுவும் இந்தப் போருக்கு முன்னால் எந்தவொரு சடங்கு நடக்க வேண்டுமோ, அந்தச் சடங்கும் நடந்து அதாவது பிரதமரை (திராவிட இராமசாமி ரெட்டியாரை) பெரியார் 7 தேதி சந்தித்த சடங்கும் நடந்துமுடிந்து, இந்த அன்புப் போர் ஆரம்பமாகி விட்டது.

“தயவு செய்து இந்தி வகுப்புக்குச் செல்லாதீர்கள்” “தயவு செய்து இந்தியைப் படியாதீர்கள்” என்று மாணவ மாணவிகளைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, அமைதியின் அடிப்படையில் அன்பு முறையில் நடத்தப்படும் இந்த அறப் போருக்கு 1-வது சர்வாதிகாரி தோழா அண்ணாதுரையவர்கள் என்பதைத் தோழர்கள் அறிவார்கள். 10-ந் தேதி முதல் தொடங்கி நடந்து கொண்டிருக்கும் இந்த அறப் போருக்கு, தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் படைத்தலைவராக நின்று மறியலிலும் ஈடுபட்டிருக்கிறார் என்பதும், மற்றவர்கள் பார்த்துப் பொறாமைப்படத்தக்க முறையில், முதல் முதலாக மறியலில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்கள் 11 பேருக்குள், தோழியர் தனலட்சுமியவர்கள் தன் 5-வயதுச் சிறுவன் திராவிடமணியுடன் ஒருவராகக் கலந்து கொண்டிருக்கிறார் என்பதும், தாய்வீடு சென்று சௌகரியக் குறைவு சிறிதுமின்றி மனச்சந்துஷ்டியோடு வாழ வேண்டிய பருவத்திலுள்ள இந்த அம்மையார் (7 மாத கர்ப்பிணி) கொடிய வெய்யலில் நின்று மறியல் செய்வதும், ஊர்வலத்தில் கலந்து கொண்டு சுற்றுவதும் ஆகிய நிகழ்ச்சிகள் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவைகளாகும்.

நான்கு நாளாக நடந்து கொண்டிருக்கும் இந்த அன்புப் போரின் கண்ணியத்தைக் கண்ட போலீஸார், எவ்விதக் குழப்பத்தையும் உண்டு பண்ணாமல் அமைதிக்கு ஆதரவாக நின்று வருவதைப் போல்இருப்பதும், மற்றொருபுறம் சிறைக்கதவுகள் திறக்கப்பட்டு நாலாயிரம் பேரைத் தள்ளுவதற்கு ஆகஸ்டு பதினைந்தைத் திட்டம் போட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கவைகளே.

திராவிட இனத்தின் இந்தப் பேரெதிர்ப்பை நாள் தோறும் பத்தாயிரக்கணக்கில் வந்து கூடிநின்று உற்சாக ஒலி எழுப்புவதும், ஊர்வலத்தில் கலந்துகொண்டு எழுச்சியோடு கட்டுப் பாட்டுக் கடங்கி நடந்து கொள்ளுவதும், ஆலத்தி எடுத்தல், மாலையணிதல், இனிய நீர் வழங்குதல் முதலிய செய்கைகளும் செய்து, சென்னைப் பெருமக்கள் பேராதரவுகாட்டி நிற்கிறாகள் ஒரு பக்கம்.

“இந்தி மறியல் நாடகம்” “மறியல் கேலிக்கூத்து” என்று மானத்தைக் கைவிட்ட தேசிய அடிமைத் தாள்களும், வன்னெஞ்சப் பார்ப்பனத்தாள்களும் இந்த நிகழ்ச்சியை வருணிக்கின்றன மற்றொரு பக்கம்.

“இந்த எதிர்ப்பை நாம் லட்சியப் படுத்தினால் தானே! இவர்களைக் கைது செய்யாவிட்டால் இந்த எதிர்ப்பின் ஆழம் எப்படி வெளியில் தெரியும்? நாம் பேசாமலே விட்டு விட்டால் இந்த எதிர்ப்புப் புசுபுசுத்துப் போய் விடாதா?” என்றெல்லாம் நம் மந்திரிசபை ஒருபக்கம் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கணக்கு அவர்கள் முன்பு நடத்திய மறியல்களை மனத்தில் வைத்துக்கொண்டு, அந்த அடிப்படையில் போடப்படும் கணக்கு என்பதும், இது எவ்வளவு தவறான கணக்கு என்பதும் அவர்கள் விரைவில் புரிந்துகொள்ளப் போகிறார்கள் என்பது நிச்சயம்.

திராவிட மந்திரிகளை அதிகமாகக் கொண்ட இப்போதையச் சென்னை மந்திரி சபையின் எந்த நடவடிக்கையையுமே, திராவிடக் கழகம் எதிர்க்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே இதுவரை திராவிடத் தோழர்கள் நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதும், திராவிடர்களின் பொறுமைக்கு எல்லை எது? என்பதைக் கண்டுவிட வேண்டுமென்கிற விபரீதப் புத்தியினாலேயே மானத்தைச் சோதிக்கும் இந்த இந்தி நுழைப்பு உத்திரவை, பார்ப்பனர்களின் மிரட்டல் முதற் காரணமாக நிற்க, திராவிட மந்திரிகள் புகுத்தியிருக்கின்றார்கள் என்பதும், திராவிடர்கள் மீது இந்தியைத் திணிப்பது எந்த நியாயத்திற்கும் எந்த அறிவுக்கும் அடுக்காது என்பதும், பெரியாரைச் சந்தித்துப் பேசிய பிரதமர் ரெட்டியார் அவர்கள் தெளிவாக, ஒழுங்குபட உணர்ந்திருப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். அப்படி விளக்கிய பிறகும்கூட ஓமந்தூரார் திட்டத்தை மாற்ற உடன்படவில்லையென்பதையறிகிறபோது, அந்தோ! ஓமந்தூராரும் பார்ப்பனச் சூழ்ச்சியில் ஏமாந்தாரே

## 5, 6-ஆயிரம்.

சென்னைக்கு இந்தி எதிர்ப்புத் தொண்டுக்கு (மறியலுக்கு) வருவதாக வெளியூரிலிருந்து, **5, 6**-ஆயிரம் கையொப்பங்கள் வந்திருக்கின்றன. மேலும் தினம் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. இங்கு சர்க்கார் மறியல்காரர்களை சிறைபிடிக்காமல் இருக்கிறார்கள். எந்தச் சமயத்தில் பிடிப்பார்களோ தெரியவில்லை.

—பெரியார் வேண்டுகோளில் ஒரு பகுதி.

என்று நம்மால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

இப்போது நடந்துகொண்டிருக்கும் முறையிலேயே மறியல்நீடித்து நடக்குமென்றும், நிஜாம்மீது போர் நிகழுமானால் அப்போது நம் நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளவேண்டியதாய் நேரிடலாம் என்றும், மற்றப்படி எந்தக் காரணத்தைக்கொண்டும் இப்போதைய அடிமைச் சாஸன உத்திரவு கிழித்தெறியப்படாதவரை நாம் நம் நடவடிக்கையை நிறுத்தமாட்டோம் என்றும் படைத் தலைவர் பெரியார் அவர்கள் நிலைமையைத் தெளிவாக்கி வற்புறுத்தி விட்டார்கள்.

15ந் தேதிக்குப் பிறகு அதாவது ஜெயில்கள் காலியான பிறகு சர்க்காரின் இப்போதைய நடவடிக்கைகளில் மாறுதல் ஏற்படுமா? ஏற்படாதா? என்கின்ற நிலைமை புரிந்தபிறகு, விரிவாக மறியல் செய்யும் திட்டம் நம் தலைவரால் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென நாம் நம்புகிறோம். அப்படி அந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முன்னால் அல்லது பின்னால் வெளியூர்களிலுள்ள திராவிடக் கழகத் தோழர்கள் என்ன செய்யவேண்டும்?

பள்ளிக்கூட விடுமுறை தவிர்த்த ஒவ்வொரு நாளிலும், அந்தந்த ஊர்களிலுள்ள திராவிடக் கழகத் தோழர்கள், பிரமுகர்கள் கருஞ்சட்டை யணிந்து காலை 8மணி முதல் 10மணி வரை ஊர்வலம் வரவேண்டும். ஊர்வலத்தில் தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! வடநாட்டு ஆதிக்கமும் சுரண்டலும் ஒழிக! தமிழ்நாடு வாழ்க! என்கிற ஒலிகளை மட்டுமே ஒலிக்கவேண்டும். இந்தக் கருத்துகளை விளக்கும் அட்டைகளை ஊர்வலத்தில் தூக்கிச் செல்லவேண்டும். இப்படியாக அந்தந்த ஊரையே ஒரு சுற்றுச் சுற்றி "இந்த நேரத்தில் சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியல் நடக்கின்றது" என்பதை மக்களுக்கு விளக்கவேண்டும் என்று படைத்தலைவர் பெரியாரவர்கள் ஆணையிட்டிருக்கிறார். இந்த ஊர்வலம் பள்ளிக்கூடங்களின் அருகிலும்,வடநாட்டு வணிக உண்ணிகள் வாழும் தெருக்களிலும் கட்டாயமாகச் செல்லவேண்டும். ஆனால் அமைதி, கட்டுப்பாடு இவைகளை ஊர்வலத்தில் கலந்துகொள்ளுவோர் மறந்துவிடவே கூடாது.

மேலும் ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள பேச்சாளர்களையும், தொண்டர்களையும் கொண்டதாய், ஒன்றோ அல்லது இரண்டு மூன்று பிரிவாகவோ, பிரசாரப் படையைத் தயாராய் அமைத்திருக்கவேண்டும். இப்படை கால் நடையாகவே அந்தந்த ஜில்லா முழுவதும் சுற்றிக், குறிப்பாகக் கிராம மக்களுக்கு அவ்வப்போதையப் போராட்ட நிலைமையை அமைதியாக மக்களுக்கு எடுத்து விளக்கி வரவேண்டும்.

நம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஊர்வலம், படை புறப்படுதல், பள்ளிகளின் முன்பு மறியல் செய்தல் ஆகியவற்றோடு மந்திரிகளைப் பகிஷ்காரம் செய்தல் என்பதும் ஒன்று. இது அந்தந்த ஊர்களுக்கு மந்திரிகள் வரும்போது மிகவும் கவனத்தோடு ஏற்பாடு செய்ய வேண்டிய திட்டமாகும்.

1. சிவப்பு நிறம் நடுவில் இல்லாத கருப்புக்கொடிகளை, இந்தப் பகிஷ்கார நடவடிக்கையில் ஏந்த வேண்டும்.

2. குறைந்த அளவு 10 பேராவது அந்த நடவடிக்கையில் கலந்து 2, 2 பேராக 5-வரிசையாவது நிற்கவேண்டும்.

3. மந்திரி வருவதற்கு முதல் நாளே ஊர் முழுதும் ஊர்வலமாகச் சுற்றி, நாற்சந்தி, முச்சந்தி, இருசந்தி முதலான இடங்களிலும், போக்குவரத்துக்கு இடையூறில்லாமல் மக்கள் கூட்டமாகக் கூடியிருக்கும் இடங்களிலும் நின்று ஒருவர், "இப்படிப்பட்ட மந்திரி நாளை இங்கு வருகிறார்! இவர் வருகையை நாம் வெறுக்கிறோம் என்று காட்டவேண்டியது உங்கள் கடமை! மந்திரி கூட்டத்திற்குச் செல்லாதீர்! கருப்புக் கொடி பிடித்து உங்கள் வாழ்வைக் காப்பாற்றுங்கள்!" என்கிற கருத்தை நாகரீகமான முறையில் மக்களுக்கு விளக்கிக்கூற வேண்டும்.

4. மறுநாள் மந்திரிகளின் நிகழ்ச்சி நிகழும் இடத்திற்குப் போய் கவர்ன்மெண்டுக்குச்சொந்தமான இடங்களில் நின்றுகொண்டு "மந்திரியாரே திரும்பிப் போங்கள்" என்று வரிசையாக நின்று கூறவேண்டியது.

என்று தலைவர் பெரியாரவர்கள் இந்தத் திட்டத்தை விளக்கியிருக்கிறார்கள்.

இத்திட்டத்தின்படி நடத்துவதற்கு, முதல் சந்தர்ப்பம் ஈரோட்டுத் தோழர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்தி மந்திரி அவினாசியார் நாளை இங்கு வரும பொழுது மந்திரிகளைப் பகிஷ்காரம் செய்தல் என்னும் இத்திட்டத்தை ஈரோட்டுத் திராவிடத் தோழர்கள் கைக்கொள்வார்கள் என அறிகிறோம். ஈரோட்டுத்தோழர்களோ அல்லது இந்தவாய்ப்பு மற்றஊருக்குக் கிடைக்குமானால் அந்த ஊர்த் தோழர்களோ, யாராயிருந்தாலும் முதன் முதலாக தங்களுக்கே, தங்களுக்கே இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு வாய்த்திருக்கிறது என்கிற பொறுப்பை யுணர்ந்து, பகிஷ்கார நடவடிக்கையை வெற்றியுற நடத்தி மற்ற இடங்களுக்கு வழி காட்டியாக விளங்கவேண்டுமென்பது நம் ஆசை.

ஊர்வலம் நடத்துகின்றவர்களும், பிரச்சாரப் படைசேர்க்கின்றவர்களும், பகிஷ்கார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றவர்களும் கண்டிப்பாக மத்தியக் கழகத்திற்கு அறிவித்தே ஒவ்வொன்றையும் நடத்த வேண்டும் என்பதை மறந்து விடவேண்டாம்.

ஓமந்தூரார் ஏமாந்து போனதற்காக, அதாவது திராவிட இனத்தைக் காட்டிக் கொடுக்கத்துணிந்து விட்டார் என்பதற்காக உள்ளம் ஒடிந்து விடமாட்டாது திராவிட இனம் என்பதைச் செயலில் காட்டவேண்டும். செயலில் காட்ட வேண்டுமென்பதினுடைய கருத்து, இந்தி நுழைப்பு என்கிற திராவிட அடிமைச் சாஸனம் கொளுத்தி எறியப் படுகிறவரை, அவ்வப்போதைய நிலைமைகளுக்கு ஏற்ப தலைவர் பெரியார்வர்களும், மத்

---

# 4-ஆயிரம்.

●

ஆகஸ்டு 15-ம் தேதி யன்று இந்திய சுதந்தரதின நாளை முன்னிட்டு 4000 சிறைக்கைதிகள் சர்க்காரால் விடுதலை செய்யப்படுவார்கள் எனத்தெரிய வருகிறது.

அரசியல் காரணமாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்றும் தெரிகிறது.

—சுதந்தர நாள் பற்றி பத்திரிகை செய்தி.

[7ம்பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டபோது என்ன கூறினார் தெரியுமா?

### ஆணவம் குறைச்சலில்லை.

“நான் இம்மாகாணத்தின் முதன் மந்திரி. மக்களால் தெரிந்து எடுக்கப்பட்டு மந்திரியாக வந்துள்ளவன். நான்உத்திரவிடுகிறேன் என்றால் மக்களின் பிரதிநிதியாகிய நான உத்திரவிடுகிறேன் என்று பொருள். அப்படி இருக்க மக்களின் பிரதிநிதிகள் அல்லாத, யாரோ வெளியில் உள்ள ஒரு இராமசாமிநாய்க்கரும் ஒரு சோமசுந்தரபாரதியாரும் எதிர்க்கிறார்கள் என்பதற்காகவா உத்திரவை மாற்றுவேன்? அவர்களுக்காகவா விட்டுக் கொடுப்பேன்? அது நடக்காது முடியாது, என்று ஆணவத்தோடு கூறினார். அதற்காக நாம் அன்று அஞ்சினோம் இல்லை. மக்களிடம் ஹிந்தியால் விளையக்கூடிய கேடுகளைப் பற்றித் தெளிவாக எடுத்துக்கூறினோம், அவர்களும் ஒப்புக்கொண்டு பேராதரவு அளிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

### ராஜிபேசிய படலம்.

அதைக்கண்டு அன்று ஆணவத்தோடு சவால்விட்ட ஆச்சாரியாரும் சமரசத்திற்கு வர, ராஜிபேச முன்னுக்கு வரநேரிட்டது. ராஜிபேச வந்தவர் ஜெயில் சூபரனடெண்ட் முன்னிலையில் தான் என்னுடன் பேசினார். சமரசம் பேச வந்தவரும் கூட இன்றும் உயிருடன் தான் இருக்கிறார். அவர் யார் என்பதையும்தான் தெரிவித்து விடுகிறேனே. வேறு யாருமில்லை, இன்றைய மத்திய அரசாங்க நிதிமந்திரியாயுள்ள தோழர் ஷண்முகஞ் செட்டியார் தான் என்னுடன் ராஜி பேச அனுப்பப்பட்டார். அவர் கூறினார் “இப்போது ஹிந்தி புகுத்தப்பட்டுள்ள 40-பள்ளிகளோடு ஹிந்தி நுழைப்பை நிறுத்திக்கொள்ள ஒப்புக்கொள்வதாயிருந்தால் போராட்டத்தை நிறுத்திக்கொள்ளச் சம்மதந்தானா” என்று கேட்டார். அதற்கு நான் சொன்னேன் “இது வெறும் வீம்புதானே. ஹிந்தி தேவையில்லை என்று அவர் உணர்வதாயிருந்தால் இந்த 40-பள்ளிகளிலும் கூட எடுத்துவிடுவதுதானே. நான் ஜெயித்தேனா, அவர் ஜெயித்தாரா என்று காட்டிக்கொள்ளத்தானே இப்படிக் கூறுகிறார்? இதற்கு ஒப்புக்கொள்ள முடியாது” என்று கூறினேன். அதற்கு அவர் சொன்னார் “இந்த 40-பள்ளிகளில் கூட ஹிந்தி நிரந்தரமாக இராது. அதுவும் குறைக்கப்பட்டு விடும்” என்று கூடக் கூறுகிறார். அப்படிச் செய்வதாயிருந்தால் போராட்டத்தை நிறுத்தச் சம்மதந்தானா” என்று கேட்டார். “அப்படியானால் முடிவாக 40-பள்ளிகளிலும் ஹிந்தி மொழி எடுக்கப்பட்டுவிடும் என்று முடிவான தேதியைக் கேட்டு வைத்துக்கொள்ளுங்கள், எனக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் கூட இல்லை. அந்தத் தேதிக்குள் எடுபடாவிட்டால் மறுபடி போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த நீங்கள் பொறுப் பேற்றுக் கொள்வதாயிருந்தால் போராட்டத்தை நிறுத்துகிறேன்” என்று கூறினேன். அதற்கு அவர் தன்னால் பொறுப் பேற்கமுடியாதெனறும், அந்தத் தேதியைக் கேட்டுத்தெரிவித்து விடுவதாகவும் கூறிச்சென்றார்.

### வேகமும் வீம்பும்.

“இந்தப்பேச்சு நடந்தது சென்னை ஜெயிலில். இப்பேச்சு நடந்த சில நாட்களில் எனக்கு காய்ச்சல் வரவும் என்னைப் பெல்லாரி சிறைக்கு மாற்றினார்கள். அங்கும் காய்ச்சல் ஏற்பட்டது. அங்கிருந்து கோவைக்கு மாற்றப்பட்டேன். நான் பெல்லாரியில் இருந்த போது இங்கு ஹிந்தி எதிர்ப்பை நடத்தியவர்கள் சற்று வேகமாகப் போய்விட்டார்கள். அதன் பயனாய்ச் சர்க்காருக்கும் வீம்பு அதிகமாகிவிட்டது. அதன் பயனாய் சமரசப்பேச்சு கைவிடப்பட்டது. கோவையிலும் எனக்குக் காய்ச்சல் ஏற்பட்டு வயிற்றுப் போக்கும் ஏற்படவே, கோவை ஜெயில்சூபரின்டெண்ட் கொஞ்சம் பயந்துவிட்டார். அவர் ஒரு டாக்டர். அவர் உடனே ராஜகோபாலாச்சாரியாரைப் பார்த்து நிலைமையைச் சொன்னார். ராஜகோபாலாச்சாரியாரும் “தாளமுத்துவுக்கும் நடராஜனுக்கும் ஏற்பட்டகதி இவனுக்கும் ஏற்பட்டு விட்டால் என்ன நேருமோ” என்று அஞ்சி, “உடனே ஓடோடியும் போய் விடுதலை செய்துவிடு. வெளியில் போய் என்ன வேண்டுமானாலும் ஆகட்டும்” என்று கூறிவிட்டார். ஞாயிறன்று சூப்பரின்டெண்ட் அவரைப் பார்த்தார். ஞாயிற்றுக் கிழமையன்றே விடுதலை உத்திரவும் செய்யப்பட்டது. பிறகு ஹிந்தி எதிர்ப்புக்காக சிறைசென்றவர்களை,

(மறு பக்கம்)

திய திராவிடக் கழகமும் செய்யும் ஆணைகளை—முடிவுகளை ஏற்று வெற்றியுற நடந்து காட்டவேண்டும். கட்டுப்பாட்டுக்கு அடங்குதலும் அமைதியான போக்கையே எந்த நேரத்திலும் கைக்கொள்ளுதலும், மிக மிக முக்கியம் என்பதையும், அதுவே நம் வெற்றிக்குத் துணை என்பதையும் அழுத்தமாக வற்புறுத்திக் கூறுகிறோம்.

## 7-8-48 நாள் பிரதமர் சந்திப்பைப் பற்றிப் பெரியார்.

★

பிரதமருக்கும் எனக்கும் ஏற்பட்ட சந்திப்பில் குறிப்பிடத் தக்க விஷயம் ஒன்றுமில்லை.

பிரதமர் மரியாதைக்காகக் கூப்பிட்டார்.

நானும் மரியாதைக்காகச் சென்றேன்.

பி-ர்—இந்தி கட்டாயம் இல்லை என்றார்.

நான்:—கட்டாயப் படுத்தப் பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

பி-ர்:—இந்திய யூனியனில் நாம் இருந்தாக வேண்டும். ஆதலால், இந்தி அவசியம் என்றார்.

நான்:—இந்திய யூனியனில் இருந்தாகவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆதலாலும் மற்ற, காரியங்களுக்கும் இந்தி அவசியம் இல்லை என்றேன்.

பி-ர்:—இதற்காகச் சத்தியாக்கிரகம் செய்யவேண்டாம் என்றார்.

நான்:—எல்லா ஏற்பாடும்செய்த பிறகு இப்போது சொல்லுவது சம்பிரதாயப் பேச்சாக இல்லாமல் உண்மையாய்ச் சொல்லுவதானால் இந்தி விஷயத்தில் ஏதாவது மாறுதல் செய்யுங்கள் என்றேன்.

பி-ர்:—ஒரு மாறுதலும் செய்ய முடியாது என்றார்.

நான்:—சரி, சென்று வருகிறேன் என்றேன்.

பி-ர்:—சரி, போய் வாருங்கள் என்றார்.

நான் வரும்போது இந்த சம்பவத்தை என்னை அழைத்து எச்சரிக்கை செய்தார் என்று கருதிக் கொண்டே வந்தேன்.

பிரதமர் நான் வந்த உடன் போலீஸ் கமிஷனரைக் கூப்பிட்டுப் பேசினாராம். பிறகுதனது போலீஸ் இலாக்கா (ஹோம் செக்ரட்டரி) காரியதரிசியைக் கூப்பிட்டுப் பேசினாராம். பிறகு மந்திரிகளுடன் கலந்தாராம்.

நான் வீடுவந்து சேர்ந்தவுடன் ஆவலாய் என்னை எதிர் நோக்கிக் கொண்டிருந்த தோழர்கள் வேதாசலம், அண்ணாதுரை மற்றும் 10 நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களோடு கலந்து பேசினேன். அவர்கள் “ஒரு சடங்கு நடந்தேறியது” குறித்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அவர்கள் சிறைவாசம் முடியும் முன்பே கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை செய்துகொண்டே வந்தார். அதையொட்டி ஹிந்தி இன்று எடுபடும், நாளை எடுபடும் என்று பேச்சு உலாவ ஆரம்பித்தது. அப்படிப்பட்ட நிலையில் யுத்தமும் வந்தது. நாம் போட்ட உத்திரவை நாம் எடுப்பானேன், வெள்ளையனே எடுத்து விடட்டுமே என்ற நினைப்பில், காங்கரஸ் மந்திரிகளும் பேசாமலிருந்து கடைசியாக ராஜினாமா கொடுத்து விட்டுச் சென்றார்கள். வெள்ளையர் சர்க்கார் ஆலோசகர்களாக வந்ததும் அந்த உத்தரவை ரத்துச்செய்துவிட்டார்கள். இதுதான் பழைய ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் சுருக்கமாகும்.

## இன்றைய இந்தி நுழைப்பு முறை.

இந்தச் சங்கதியை நன்றாக அறிந்துள்ளவர்கள், இன்று தாம் பதவிக்கு வந்ததும் அதே காரியத்தை மறுபடியும் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். சுதந்தர அரசாங்கத்தில், சொந்த அரசாங்கத்தில் தான் அந்நிய வடநாட்டு மொழி நம் நாட்டில் புகுத்தப்படுகிறது. அதுவும் முன்னையை விடச் சற்று கடினமான முறையிலேயே புகுத்தப்பட்டுள்ளது. எனவே நமது போராட்டத்தின் அளவும் முன்னையதை விடச் சற்று விரிவானதாகவே அமையும். உத்திரவு பிறப்பித்தவர்களும், திடீரென்று ஹிந்தியை இந்நாட்டில் கட்டாய பாடமாக்கிவிடவில்லை. இதுதான் நாம் சிந்திக்கவேண்டிய விஷயம். ஹிந்தியை இன்னும் சில பாஷைகளோடு சேர்த்து அவற்றில் ஏதாவதொன்றை இரண்டாவது மொழியாகப் படிக்க வேண்டும் என்று உத்திரவு பிறப்பித்தவர்கள் மாகாணம் பூராவுக்கும் ஒரே மாதிரி உத்திரவைப் பிறப்பிக்கவில்லை. இரண்டாம் மொழி கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய பகுதிகளில் மட்டுமே கட்டாயம் ஆக்கப்பட்டது, தமிழ் நாட்டில் இஷ்டபாடமாக வைக்கப்பட்டது. அந்த உத்திரவிலேயே அதற்குக் காரணமும் கூறியுள்ளார்கள். தமிழ்ப்பகுதியில் ஹிந்தி புகுத்தப்படுவதைச் சிலர் ஆக்ஷேபிப்பதால் இரண்டாம் மொழியை இப்பகுதியில் மட்டும் கட்டாயமாக்கவில்லை என்று திட்டமாகக் கூறியுள்ளார்கள்.

## சண்டைக்குப் போவானேன் என்றே கருதினோம்.

“ஹிந்தி இந்நாட்டில் இஷ்டபாடமாக வைக்கப்பட்டது கூடத் தவறு; மறுபடியும் ஆட்சியாளர்கள் நம்மை வலுவில் சண்டைக்கு இழுக்கத் துணிந்து விட்டார்கள்போல் இருக்கிறது'' என்று இவ்வுத்திரவைக் கண்டித்து ‘விடுதலை’யில் எழுதியிருந்தோம். என்றாலும் அப்போது இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை நடத்தவேண்டுமென்று நாங்கள் தீர்மானம் செய்யவில்லை. சண்டைக்குப் போவானேன், இஷ்டப்பட்டவர்கள் வேண்டுமானால் படித்துக்கொள்ளட்டுமே என்று எங்கள் கருத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு மட்டும் நிறுத்திக்கொண்டோம்.

## பார்ப்பனர் வயிறெரிந்தால்.........

தமிழ் நாட்டில் மட்டும் ஹிந்தி இஷ்டமாக்கப்பட்டது ஒன்றிரண்டு பார்ப்பனர்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்கியது. கோவைக்கு மந்திரியார் சென்றிருந்தபோது “ஏன் தமிழ் நாட்டில் மட்டும் ஹிந்தி இஷ்டபாடமாக்கப்பட்டது'' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறார். அப்பதில் என்ன தெரியுமா? “வேண்டுமென்றுதான் நாங்கள் இந்நாட்டில் ஹிந்தியைக் கட்டாயமாக்க வில்லை. இந்த நாட்டு மக்கள் ஹிந்தி மொழியை விரும்ப மாட்டார்கள் என்பதை உணர்ந்து தான் அப்படிச் செய்தோம். அந்த உத்திரவிற்கு ஆக்ஷேபணை வராததிலிருந்து நாங்கள் நினைத்தது சரியென்றே தெரிகிறது'' என்று பதில் கூறியிருக்கிறார். இச்சேதி 24—6—48௳ சுதேசமித்திரனில் 22—6—48-ல் மந்திரியார் பேசியதாக “ஹிந்தியும் கட்டாயபாடமும்'' என்கிற தலைப்பில் வெளிவந்துள்ளது. படிக்கிறேன் கேளுங்கள். “வேண்டுமென்றுதான் ஹிந்தி இந்நாட்டில் (தமிழ்நாட்டில்) கட்டாயமாக்கப்படவில்லை. பொதுமக்கள் இவ்வுத்திரவை எப்படி ஏற்கிறார்கள் என்று கவனிக்கவே இப்படி உத்திரவு பிறப்பித்தோம். இரண்டொரு இடத்தைத் தவிர இவ்வுத்திரவிற்கு ஆக்ஷேபணையே வரவில்லையே. அப்படியிருக்க எப்படி பொது மக்கள் அபிப்ராயத்திற்கு விரோதமாக எப்படி ஹிந்தியைக் கட்டாயப்படுத்துவது'' என்று பதில் கூறியிருக்கிறார். இதை நீங்கள் நன்கு யோசித்துப் பார்க்கவேண்டும். ஆக்ஷேபணையே வரவில்லையே என்று இரண்டு ஏகாரம் போட்டு பேசியிருக்கிறார். அதே 24-6-48 தேதியில் இந்தச் சேதியையும் வெளியிட்டு-விட்டு, “ஹிந்தி கட்டாயமாகத் தேவை'' என்று “சுதேசமித்திரன்'' ஒரு தலையங்கமும் தீட்டிவிட்டது. அதுவும் ஹிந்தி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பதுதான் பொதுஜன அபிப்பிராயம் என்று கூடக்கூறி விட்டது. அதற்கு ஆதாரமாகத்தம் உத்திரவில் “சிலர் ஆக்ஷேபிப்பதால் கட்டாயமாக்கவில்லை'' என்று கூறியிருப்பதைக் காட்டி “கட்டாய இந்தியை ஆக்ஷேபிப்பவர்கள் ஒரு சிலர்தான் என்பதை மந்திரியார் உணர்ந்திருக்கும் போது, “அந்த ஒரு சிலருக்காக இஷ்டபாடமாக்குவதா என்று கேட்டிருப்பதோடு, சர்க்காரை எப்போதும் எதிர்ப்பவர்கள் எந்த நல்ல காரியத்தையும் எதிர்க்கத்தான் செய்வார்கள். அதற்காக நல்ல காரியத்தைக் கைவிட்டு விடுவதா? நல்ல காரியத்திற்குக் கூட ஒரு சிலர் ஆக்ஷேபணை செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்று கூறி மதுவிலக்குக்கூடசிலர் ஆட்சேபிக்கவில்லையா? என்று உதாரணம் காட்டியிருக்கிறது.

## கட்டாய உத்திரவு.

ஆக்ஷேபணையே வரவில்லையே என்று கூறிய மந்திரியார், சுதேசமித்திரனுடைய ஆக்ஷேபணையைக் கண்டதும், உடனே தம் உத்திரவை மாற்றி விட்டார். மாற்றும்போதும் தெளிவாகவே கூறியிருக்கிறார். தமிழ்நாட்டிலும் ஹிந்தி கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார். முந்திய உத்திரவில் தமிழ் நாடு மட்டும் கட்டாயத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது; இப்போது மற்ற பகுதிகளோடு தமிழ்நாடும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்று.

## ஏதோ ஒன்றென்றால் ஏனோ வாத்தியாரும் சலுகையும் கட்டாயம்?

இவ்வளவுக்கும் பிறகு இப்போது சர்க்கார் கூறும் முக்கிய வாதம் “நாங்கள் ஹிந்தி கட்டாயம் என்று சொல்லவில்லையே'' என்பது தான். சர்க்கார் உத்திரவிலும், மந்திரிகள் பேச்சுக்களிலும் கட்டாயம் என்கிற வார்த்தை பல முறை காணப்படுகிற போதிலும், தாங்கள் கட்டாய பாடமாக்கவில்லை என்றுகூறி மக்களை ஏய்க்கப்பார்க்கிறார்கள்—எப்படிக் கட்டாயமில்லை என்று கூறுகிறார்கள் என்றால் “ஹிந்தியை எங்கு கட்டாயம் என்றோம். ஹிந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது உருது அல்லது மற்ற ஏதாவதொரு இந்திய மொழி ஒன்றைத்தானே கட்டாயமாக்கியிருக்கிறோம். இரண்டாம் மொழி தான் கட்டாயமே ஒழிய இந்தியல்லவே என்கிறார்கள். ஹிந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது அரபி அல்லது உருது அல்லது தெலுங்கு என்று ஒரு 5 மொழிகளில், ஏதாவதொன்றையெடுத்துக்கொள்ளும்படிகூறி விட்டு, ஹிந்தி படிப்பவர்களுக்குத்தான் சர்க்கார் உத்தியோகம் அளிக்கப்படும், சர்க்கார் சலுகை அளிக்கப்படும் என்றால், ஹிந்தி தவிர வேறு எதைக் கற்பார்கள் மாணவர்கள். ஏதாவதொன்றைப் படிக்கலாம் என்று கூறுபவர்கள் ஹிந்திக்கு மட்டும் எல்லாப் பள்ளிகளிலும் வாத்தியார்களை நியமிப்பானேன்? ஹிந்தி வாத்தியார்களை உற்பத்தி செய்யமட்டும் பணம் ஒதுக்கி வைப்பானேன்? ஹிந்திதவிர மற்ற மொழிகளுக்கு இவ்வித ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதிலிருந்தே,

சர்க்காரின் பித்தலாட்டம் வெளிப்படுகிறதா, இல்லையா? இது தான் போகட்டும்.

### சர்க்கார் பத்திரிகை இது! சாகஸப் பித்தலாட்டம் இது!

சர்க்காரின் கருத்தைத் தெரிவிக்கச் சர்க்காரால்நடத்தப்பட்டுவரும் "சென்னைச் செய்தி" என்ற மாத வெளியீட்டில், கனம் கல்வி மந்திரியார் என்ன கூறியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். இது சர்க்கார் பத்திரிகை. இதில் கனம் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியார் எழுதியது என்று போடப்பட்டு, அவரது போட்டோ வுடனும் கையெழுத்துடனும்வெளிவந்துள்ளது. என்னவென்று கவனியுங்கள். 1—8—48-ல் வெளியாகி 2—8—48-ல் எங்களுக்குக் கிடைத்திருக்கும் இப் பத்திரிகையில் (பத்திரிகையையும் போட்டோவையும் காட்டி) ஹிந்தியைப்பற்றி ஏதேதோ எழுதிவிட்டு "இந்நாட்டு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு அளவுக்கேனும் ஹிந்தி தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்த வேண்டியது அனாவசியம். எனவே தான் எல்லாஹைஸ்கூல்களிலும் ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளார்கள்" என்று எழுதியிருக்கிறார். இப்படி எழுதி விட்டு நான் எங்கே இந்தியைக் கட்டாயமாக்கி இருக்கிறேன என்று கூறினால் அது பித்தலாட்டமா அல்லவா? நேற்று முந்தாநாள் நடைபெற்ற சம்பாஷணையின்போது இதையெல்லாம் எடுத்துக்காட்டினேன் என்றாலும் அவர்கள் சொன்னதையே தான் திருப்பித்திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

### முடியாததை முடியாதேன்பதா வெட்கம்?

இப்போதோ கட்டாயப்பாடம் மட்டும் இல்லை; கட்டாயப் பரீக்ஷையும் உண்டு. அதில் நல்லமார்க்கு வாங்கினால்தான் தேர்ச்சியும் உண்டு. நமது பிள்ளைகள் எப்படி ஹிந்தியைக் கற்றுத் தேற முடியும்? மிகக்கஷ்டமாயிருக்குமே என்று கூறினால் 'அப்படிச் சொல்லிக் கொள்வது வெட்கமாயில்லையா' என்று மந்திரியார் கேட்கிறார். நம்மால் செய்ய முடியாத ஒன்றை நம்மால் செய்யமுடியாதே என்று கூறுவதற்கு நாம் ஏன் வெட்கப்படவேண்டும்? முடியாத ஒன்றை முடியாது என்று கூறுவதில் அவமானம் என்ன இருக்கிறது? நான்கேட்கிறேன் மந்திரியாரை "உங்களுக்கு நீக்ரோ பாஷை தெரியுமா? அப்பாஷை உங்கள் நாக்கில் நுழையுமா என்று. நுழையாது என்றுதானே மந்திரிபதில் கூறுவார். நீக்ரோ பாஷை என் நாக்கில் நுழையாது என்கிறாயே, அதைக்கூறிக் கொள்வது அவமானமாயில்லையா என்று கேட்டால் அதற்கென்ன பதில் கூறுவார் மந்திரியார்? தமிழ் நாட்டில் பிறந்த ஒருவருக்கு தமிழ் படிக்கத் தெரியவில்லை, தமிழ் பேசத்தெரியவில்லை என்றால், அதற்காக வெட்கப்படுவதில் வேண்டுமானால் நியாயம் இருக்கிறது. தமிழ் நாட்டில் பிறந்தவன் தனக்கு ஹிந்திவராது என்று கூறுவதில் என்ன வெட்கப்படவேண்டியிருக்கிறது.

### பார்ப்பனரோடு இந்திப்போட்டி பலிக்குமா?

பார்ப்பனர்கள் சமஸ்கிருதம் படித்தவர்களின் சந்ததியார்கள். சமஸ்கிருதத்தில் ஒவ்வொரு எழுத்துக்கும் 4 சப்தங்கள் உண்டு. ஹிந்திக்கும் அப்படியேதான். நாலு சப்தங்களுக்கேற்ப எழுத்துருவங்களும் மாறியிருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியில் அப்படிக்கில்லை. சப்தத்தில் மாறுதல் இருந்தாலும் எழுத்து உருவத்தில் மாறுதல் இல்லை. தமிழ் எழுத்துக்களை உச்சரிப்பதும் வெகுசுலபம். தமிழ் எழுத்துக்களையே உசசரிக்துப் பண்பட்ட தமிழன் நாக்கால் ஹிந்திச் சப்தத்தைச் சரிவர உச்சரிக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு மொழியை நமது சிறுவர்களின்மீது திணித்து அவர்களைக் கொடுமைப்படுத்தலாமா? என்பதுதான் எங்கள் கேள்வி.

### தெலுங்கு ரெட்டியார் தான் ஆனால் தெலுங்கைச் சரியாகப் பேசுவாரா?

நான் ஒன்று சொல்ல நினைக்கிறேன். அதற்காக நண்பர் ரெட்டியாரும் என்மீது கோபித்துக்கொள்ள மாட்டார் என்று கருதுகிறேன். ரெட்டியார் ஒரு தெலுங்கரானாலும் அவருக்குச் சரியாகத் தெலுங்கு பேசத் தெரியாது. நான் ஒரு கன்னடியன் என்றாலும் எனக்குச்சரியாகக் கன்னடம் பேசத் தெரியாது. என்? ரெட்டியாரின் மூதாதையர் தமிழ் நாட்டில் வந்து குடியேறி சுமார் 600 ஆண்டுகள், சுமார் 10-தலைமுறைகள் ஆகியிருக்கும். அதற்கும் பலஆண்டுகள் முந்தித்தான் எனது மூதாதையரும் தமிழ் நாட்டை அடைந்திருக்கவேண்டும். 10 தலைமுறைகளாக தமிழ் நாட்டிலேயே எங்கள் குடும்பத்தினர் வாழநேரிட்ட காரணத்தால், எங்கள் சொந்தமொழி எங்களுக்குச் சரியாகத் தெரியாது போய்விட்டது. நான் பேசும் கன்னடமும், ரெட்டியார் பேசும் தெலுங்கும் ஒரு தமிழனுக்குத் தான் புரியுமே யல்லாது ஒரு கன்னடியனுக்கோ, ஒரு தெலுங்கனுக்கோ சரியாகப் புரியாது. காரணம் தமிழ் நாட்டிலேயே பலகாலம் இருந்து தமிழர்களிடையே பழகித் தமிழே பேசி வந்ததுதான். தமிழ் திரிந்த தெலுங்கே, பழக்கத்தால் ரெட்டியாருக்கு மறந்து போய்விட்டதென்றால், சரிவரக்கற்க, சரிவரப் பேச முடியாது போய்விட்டது என்றால், தமிழ் மாணவர்களால் ஹிந்தியை எப்படிப் படிக்க முடியும் என்று நண்பர் ரெட்டியார் சிந்திக்கவேண்டாமா?

(முடியவில்லை.)

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வுடமை, சோஷியலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலரும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். அதற்குள் குணசீலன் கைதுசெய்யப்படவே குழப்பம் அதிகரித்தது. உடனே போலீஸ் அதிகாரி இரத்த வெறிபிடித்த மலபார் போலீஸாருக்குத் துப்பாக்கிப் பிரயோக உத்தரவு கொடுத்தார். 'படார், படார்' என்ற பலத்த சத்தம் கேட்டது.

* *

கமலா 'அய்யோ'வென அலறியபடி படுக்கையை விட்டு எழுந்தாள். அவள் நெஞ்சு துடியாய்த்துடித்தது. உடல் 'வெட வெட'த்தது. திரும்பவும் அதே 'படார் படார்' என்ற சத்தம். வெளிப்புறத்தில் யாரோ 'கமலா' என்று கூப்பிடுவது கேட்டது. அப்போதுதான் கமலாவுக்கு சுய நினைவு வந்தது. இவ்வளவு நேரமும்தான் கண்டது, தன் கோழைமனத்தின் ஆழத்திலிருந்த தன் உண்மைஎண்ணத்தின் அடிப்படையில் எழுந்த வெறுங்கனவு என்பதை எண்ணும் போது கமலா வெட்கினாள். ஆவலுடன் ஓடிப்போய்க் கதவைத்திறந்தாள் கமலா. இந்தி எதிர்ப்பு மறியலுக்குச் சென்றிருந்த அவள் கணவன், குணசீலன் புன்னகையுடன் நின்றிருந்தான். கமலாவின் முகத்தில் அசட்டுச் சிரிப்பொன்று அரும்பியது. "என் கமலா அய்யோவென்று அலறினாய்? ஏதாவது பயங்கரக்கனவு கண்டாயோ?" என்று ஏளனமாகக் கேட்டான் குணசீலன. கமலா தன் கோழைத் தனத்தை மறைப்பதற்காக "நீங்கள் இந்தி எதிர்ப்பு மறியலுக்குச் செல்லவில்லையா?" என்று கேட்டாள். "இந்தி எதிர்ப்பு மறியல் 9 மணிக்குத்தானே ஆரம்பமாகிறது. அதற்குள் உன் நிலையினை அறிந்து போகவேண்டுமென்றே என் காரியக்கமிட்டி கூட்டத்தை முடித்துக்கொண்டு உன்னிடம் வந்தேன். என் அன்பே, கமலா! நீயும் வா என்னுடன். நம் தாய் மொழியாம் தமிழைக் காப்போம். சிறைபுகுவோம். வெற்றி காண்போம்" என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டே கமலாவின் மலர்க்கரத்தைப் பற்றினான் குணசீலன். இருவரும் புறப்பட்டனர் இந்தி எதிர்ப்பு அறப்போர்க்களத்தை நோக்கி.

வாழ்க தமிழ்! ஒழிக இந்தி!

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தனர். எனவே மக்களைப் பிளவு படுத்தும் பல்வேறு ஜாதிகள் அன்று தோன்ற இயலவில்லை. 'சாதி' என்ற வட சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் இல்லாததிலிருந்தே, உண்டா காததிலிருந்தே இவ்வுண்மை புலனா கிறதன்றோ? அங்ஙனம், ஒன்றுபட்டு வாழ்ந்த உயர் தமிழினத்தவர் ஆரிய மொழியே மேலானதெனறு கருதினர். எனவே அம்மொழி எடுத்தியம்பிய வரு ணாஸ்ரம அதர்மத்தையும் சீலமுடைத் தெனக் கொண்டனர். அதனால் பிளவுண்டு சூத்திரராய்த் தாழ்ந்த னர். தாழ்ந்ததுமல்லாது தங்களுக் குள்ளேயே ஆயிரமாயிரம் சாதிகளை யுண்டாக்கி இன்றுவரை அல்லற்படு கின்றனர்.

'ஒழுக்கம் விழுப்பந்தரலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'

என்ற விழுமிய கொள்கை யோடு அன்றையத் தமிழர் வாழ்ந்ததால் தான் மாசிலாமணிமேக லையும், கற்பின் வெற்பாம் கண்ண கியும், நாகர்குலத்தோரையும் நல் வழிப்படுத்தவல்ல சாதுவனும், 'அய் யோ, தவறாகக் கோவலனைக் கொல் லச் செய்தேனே, 'யானோ அரசன், யானே கள்வன்', என்று தன் தவறை உணர்ந்த உடனேயே உயிர்நீத்த உயர் மன்னன் நெடுஞ்செழியனும் தோன்றி வளர்ந்து, வாழ்ந்து ஒழுக்கத்தை நாட்டிலே பரப்பினர். ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பியதால்தான், ஒழுக் கமே உருவாகிய கண்ணகிக்குக் கற் சிலையெடுத்துக் கைகூப்பினர் அன்று வாழ்ந்ததமிழர். பிறகு, "ஒரு மனை விக்குத் தன் கணவனிடம் பிள்ளைப் பேறு கிட்டவில்லையேல், தன் கண வனின் உடன்பிறந்தோர் இருந்தால் அவர்களுடன் கூடி மக்கட் பேறு பெறலாம்" என்று விபசாரத்தை விளக்கிடும் மனுநீதியையே ஒப்பற்ற ஒழுக்க நூலாகக் கருதினர். அங்ங னம் கருதியதால்தான் கண்ணகிக்குச் சிலையெடுத்துக் கோயில் சமைத்தவர், விபசாரி திரௌபதியை அம்மனாக்கி ஆலயங்கட்டி வழிபடுவாராயினர்.

'ஊழையும் உப்பக்கங்காண்பர்
உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்',
'தெய்வத்தால் ஆகாதெனினும்
முயற்சிதன் மெய்வருத்தக்
கூலிதரும்'

தளரா உழைப்புக்கு மதிப்பளித்ததால் தான் நாடுபலவென்று நானிலமதனில் நனிசிறக்க வாழ்ந்தனர் அன்றையத் தமிழர். பிறகு, 'யாரை விட்டது காண் தலைவிதி, எவரை விட்டது காண்', என்ற ஆரிய வறட்டு வேதாங் தத்தைப் பின்பற்றியதால் முயற்சி யழந்து, 'என்செயலாவது யாதொன் றுமில்லை எல்லாம் நின்செயலே', என்று பாடிச் செயலிழந்து, வாழ் விழந்து வறுமையுள் உழல்வாராயினர் —உழலுகின்றனர்.

ஆரிய நாகரீகத்தை மேற்கொண்ட தால்தான், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழு துண்டு பின் செல்பவர்', என்று உழு தொழிலுக்கும், உழவருக்கும் உயர் வளித்த தமிழர், உழுதொழில் செய் தல் இழிசெயலெனக் கருதும் ஆரிய ரை உயர்சாதியினர் என்று போற்றிச் 'சாமி'யெனவும் அவர்களையழைக்க லாயினர்—அழைக்கின்றனர்.

அன்றையத் தமிழர், 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம்வரின்', என்று மானமே உயிரினும் உயர்ந்தது என்று மானத்திற்கு மதிப்பளித்து வாழ்ந்த தால்தான், தமிழரை இகழ்ந்தனர் கனகவிசயர் என்று கேள்வியுற்றதும், மானத்தால் மனங்கொதித்து, 'அறிந் திலர் போலும் அருந்தமிழராற்றல்', என்று சீறிச்சினந்து, பொங்கியெழு ந்து, படையொடு சென்று பொருது, வென்று வாகை சூடினான் செங்குட் டுவன். பிறகு அவன் வழிவந்தோர் ஆரியத்தைப் பின்பற்றினர். ஆரிய மோ மானத்திற்கு மதிப்பளிக்கவில் லை. 'உயிரே மானத்தினும் மேலா னது. எனவே உயிர் வாழ எத்த கைய சூழ்ச்சியும் செய்யலாம். மானத் தை விற்றேனும் உயிர்வாழலாம்', என்ற கொள்கையது ஆரியம். அக் கொள்கையை யேற்றுக்கொண்டதால் மானமிழந்தனர், 'உயிரினும் மேலது மானம்', என்று வாழ்ந்த தமிழர். அதனால்தான், 'திருடன், வேசிமகன், இழிகுடிப்பிறந்தோன்', என்னும் பொ ருள்களுள்ள சூத்திரன் என்னும் சொல் லால் தன்னையழைக்கவும், தமிழன் அதைப்பற்றிக் கவலையொன்றுங் கொண்டானில்லை; சினந்தானில்லை. மாறாக சூத்திரன் என்றழைப்பவனை யே 'மமதேவா', என்றழைக்கும் இழி நிலையையும் எய்தினான். இன்னும் அந்நிலையிலேயே இருக்கிறான். என வே மானம் மங்கியது ஆரியத்தால்.

'தோன்றிற்புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலில்
தோன்றாமை நன்று',
'இசையொழிய வாழ்வாரே
வாழாதவர்',

என்று புகழொடு வாழ்தலே வாழ்தலா குமென்ற வாழ்க்கைக் குறிக்கோளு டன் வாழ்ந்தனர் அன்றையத் தமிழர். புகழடைய எது வழி, எது வழி, என்று வழிதேடும் எண்ணத் திலேயே இருந்தனர். வீரனா கிடில் புகழ்வந்துறும் என்று வீர ராயினர் பலர். 'அருவர் அருவ ரெனா' பிறர் அஞ்சுகின்ற தன்மை யிலே விண்ணதிர, மண்ணதிர மாற்றான் மனமதிரப் போர் புரியும் மறவர் மல்கினர். சேரன் செங்குட்டுவனும், பாண்டியன் நெடுஞ் செழியனும், சோழன் கரிகாலனுந் தோன்றினர். அவர் தம் வீரத்தின் ஒலி நாவலந்தீவெலாம் கடந்து ஒலித் தது.

புலவன்ஆகிடில்நிலவுலகழியுமட்டும் நிலையான புகழ் அடையலாம் என்று புலவராயினர் பலர். ஆகவே தான் இளவெயினி, ஔவை, மாசாத்தியார் போன்ற புலவ மகளிரும், சில ஒழுக் கத்தால் மணியெனத் திகழ்ந்த மணி

## இது மூடநம்பிக்கையல்ல!

எனக்குத் "தெய்வீகம்" என்ப தில் நம்பிக்கை கிடையாது. ஞானத்தில், அறிவில், சத்தியத் தில் நம்பிக்கை உண்டு. இது மூட நம்பிக்கை அல்ல. அல்லது நம் பித்தான் தீரவேண்டுமென்பதின் பாற்பட்டதல்ல. பிரத்யக்ஷ அனு பவத்தில் அனுபவித்து வருபவன், பிறத்தியாருக்கும் மெய்ப்பித்துக் காட்டுகிறான். ஆதலால், நான் மூட நம்பிக்கையில், மகாத்மா தன்மையில் இதைப்பேசவில்லை. சத்திய நீதியில் பேசுகிறேன், எப் படி என்றால்,

இது நம் நாடு. வட நாட்டான் ஆதிக்கம்செலுத்துகிறான். சுரண்டு கிறான்.

நாம் இந்நாட்டு மக்கள். இந் நாட்டு மன்னர் சந்ததிகள். ஆரி யன் ஆதிக்கங்கொண்டான். பிச் சைக்குப் புகுந்த ஆரியனுக்குப் பிறவி அடிமையாயிருக்கிறோம்.

தமிழ் நம் நாட்டு மொழி, இன மொழி. இந்நாட்டுக் கலாச்சாரத் துக்கு ஏற்றமொழி. வடமொழி— அன்னிய மொழியின் ஆதிக்கத் தில் நம் மனிதத்தன்மை, மானம், உரிமை பாழாக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு நம் உடன் பிறந்தவர் கள் விபீஷணர்களானது உண்மை யில் மகாமகா இழிவு என்பது சத்தியம்.

இவைகளைத்தான் சத்தியமும், நீதியும் ஆகும் என்றேன். இவை தோல்வி உறாது! தோல்வி உறாது! தோல்வி உற்றால்தான் நட்டம் என்ன? அந்தத் தோல்வியைக் கண்டிப்பாய் நாம் அனுபவிக்க மாட்டோம். நம்மைத் தோற்கடித் தவர்களும், தோல்வியைக் கண்டு சும்மா இருப்பவர்களும், தோல்வி யைச் சகித்துக்கொண்டு உயிர் வாழுபவர்களுமேயாவார்கள். அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

—ஈ. வெ. ராமசாமி.

மேகலையின் சரிதத்தையாத்த சீத்தலைச் சாத்தனாரும், கற்பினுருவாகிய மாசறு பொன்னாம், காசறுவிரையாம் கண்ணகியின் வரலாற்றைக் கனி நிகர் தமிழில் வளமுடனியற்றிய இளங்கோ வடிகளும், எம்மதத்தவரும், எந்நாட்டவரும், எம்மொழியினரும் சம்மதமென்று சால்புடைய நூலெனப் போற்றிப் புகழ்ந்திடும்—பெரும் பொருள் தன்னை இருசிறு அடிகளால் அழகுற விளக்கும் திருக்குறள் தன்னை, உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட வள்ளுவனும், புறநானூற்றை, அகநானூற்றை, ஐங்குறு நூற்றை இயற்றிய புலவர் பெருமக்களும் தோன்றினர் அன்று.

ஆனால் இன்றோ படித்தறியாக் கூட்டமெனப் பழிக்கப்படுகின்ற நிலைமையிலே உள்ளனர் அத்தகு தமிழர். ஏன்? தமிழைத் தாழ்ந்தது எனக் கருதியதால், 'புகழிலாது வாழ்வாரே வாழாதவர்', என்ற வள்ளுவனின் வாய்மொழியை மறந்தனர். உயர்மொழி எனக் கருதிய வடமொழியில் வெண்ணையுண்ட வாயன், 'செய்வதைச் செய். செய்கையின் விளைவைப் பற்றிக் கவலைப்படாதே. அதை என் சித்தத்திற்கு விட்டுவிடு', என்று கூறியதை மேற்கொண்டனர். எனவே தான் செயலற்று, செய்கையின் விளைவு ஈதாய் இருக்கும் என்று ஆய்வதற்று, முயற்சியற்று, நாட்டிலே புகழ் நாட்டுவோம் என்ற எண்ணமற்றுப் போயினர். முன்பு புகழை விரும்பினர். செய்கின்ற ஒவ்வொரு செயலாலும் புகழடையவே விழைந்தனர். அதனையடையும் வழிகளை மேற்கொண்டனர். மண்ணுள்ளளவும் மாயாத புகழினைப் பெற்றனர். பிறகோ 'செய்யும் செய்கையின் முடிவைப் பற்றியே கவலைப்படாதே' எனக்கூறும் ஆரிய நச்சுக்கொள்கையைப் பின்பற்றினர். எனவே புகழைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அதனால் தாழ்ந்தனர். வாழ்விழந்தனர், தடுமாறுகின்றனர்.

இதுவரை யான் எடுத்தியம்பியவற்றிலிருந்து நண்பா, ஒரு இனத்தவரால் எம்மொழி உயர்ந்தது எனக் கருதப்படுகிறதோ, அம்மொழி நவிலும் நாகரீகத்தை அவ்வினம் மேற்கொள்ளுகிறது என்பது பெறப்படுகிறதல்லவா? அதுமட்டுமன்றி, உயர்வோடு வாழுமோரினம் தன்னின மொழியைத் தாழ்ந்தது எனக்கருதி, பிறிதொரு இனத்தின் மொழியே சிறப்புடையது எனக் கருதத் தொடங்குமேல் நாளுக்கு நாள் தன்னினப் பண்பெலாங்குன்றி, தவறாகச் சிறப்புடையதெனக் கருதப்பட்ட மொழி பேசுவோர்தம் இனப் பண்புகளை மேற்கொள்ள நேரிடும் என்பதும் பெறப்படுகிறதன்றோ? தன்மொழிதாழ்ந்தது எனக்கருதும் இனம், தன்னினப் பண்புகளை இழந்து முன்பிருந்த இனமாக இல்லாது போய்விடுகின்றது என்ற இவ்வுண்மையைத் தான் அழகாக அந்த எஃகு மனிதன் ஸ்டாலின் செப்புகிறான் கீழ்க் கண்டவாறு.

1. ஒரு மொழியும், நாடும், பொருளாதாரவாழ்வும், உளப்பண்புகளும் ஒன்றிய, வரலாற்றின் வாயிலாகத் தோன்றிய கட்டுப்பாடான ஒரு சமுதாயமே ஒரு இனமெனப்படும்.

2. மேற்கூறிய பண்புகளில் (நாடு, மொழி, பொருளாதார வாழ்வு முதலியன) ஏதேனும் ஒன்று மட்டும் ஒரு இனத்தைக் குறிக்கப் போதுமானதல்ல.

3. மாறாக மேற்கூறிய பண்புகளில் ஏதாவதொன்று இல்லாமற் போய் விடக்கூடும். அப்பொழுது அந்த இனம் இனமாக இருக்கவியலாது.''

ஸ்டாலின் தன்கடைசி அறிவுரையிலே ஒரு இனத்தின் மொழியோ, நாட்டின் எல்லைகளோ, பொருளாதார வாழ்க்கைமுறையோ, உளப்பண்புகளோ மறைய நேருமேல் அந்த இனம் மறைய நேரிடும் என்று கூறுகின்றார். தமிழினத்தின் தமிழ் மொழி மறைந்திடாவிட்டாலும் மதிக்கப்படவில்லை. ஆதலால்தான் தமிழினம் தன்னினப் பண்புகள் இழந்து ஆரியவயத்ததாயிற்று.

பிறகு வந்தது மொழிப்போராட்டம். ஆச்சாரியார் ஆட்சிதன்னில் தமிழைக் காத்திட தள்ளாதவயதிலே சீறி எழுந்து, சினந்து எதிர்த்தது ஹிந்தியின் நுழைவை ஈரோட்டுச் சிங்கம். 'செந்தமிழ்க்குத் தீமைவந்த பின்னும், இந்தத்தேக மிருந்தொரு லாபமுண்டோ, என்று உயிரினும் ஓம்பினர் தமிழர் தம்மொழியை. ஆயிரத்துக்கு மேலே சிறைசென்று இருவர்உயிரீந்து காத்தனர் இனியசெந்தமிழை. அன்றிலிருந்து தான் சங்ககாலங்களில் தரப்பட்ட மதிப்பு தரப்பட்டது தமிழ் மொழிக்கு. 'வடமொழிக்குத் தாழ்ந்தது தமிழ்,' என்ற தவறான எண்ணம் மாறி, 'மாநிலத்தில் முதல் மனிதன் முதலிலுரைத்தமுதுமொழி, அன்று முதல் இன்றுவரை அழகுகுன்றா அரும் மொழி எம்தமிழ்மொழி' என்று போற்றிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் தமிழ்ப்பண்புகள் பண்டைய தமிழகத்திலே மிளிர்ந்தது போலவே மிளிர ஆரம்பித்திருக்கின்றன. ஆரிய நாகரீகம் வெறுக்கப்படுகின்றது. ஆதலினால் தான் வீரத்திற்கு இராமனையும், அருச்சுனனையும் எடுத்துக் காட்டாகக் காட்டிவந்த தமிழர், இன்று சேரன் செங்குட்டுவனையும், கங்கைகொண்டானையும், கரிகாலனையும் எடுத்துக்காட்டுகின்றனர். கற்பிற்சிறந்தவர் சீதையும், திரௌபதியுமே என்று போற்றிவந்த ஆரியவயத்தராகிய தமிழர், கற்பின் வெற்புஎம் கண்ணகியே' எனக் கூறிக் களிக்கின்றனர். 'சாதிகள், ஆரியம் ஈன்ற நச்சரவம் அதை யொழித்திடுவோம்' என்று ஒன்று படுகின்றனர் கலப்பு மணங்களால். 'திராவிடர்' என்ற அந்த அற்புதச் சொல்லினால் வேற்றுமைகளை வேரறுக்கின்றனர். ஆரியத்தால் அடிமையினுங்கீழாய் அல்லலுற்றவர், தமிழ் மொழிப்பற்றால், 'தமிழர்தம் ஆட்சியை நிறுவியே தீருவோம்,' என்று எக்காளமிடுகின்றனர். ஸ்ரீராமஜெயந்திகளையும், கிருஷ்ண ஜெயந்திகளையும், கந்தசஷ்டிகளையும் கொண்டாடியவர் தொல்காப்பியன் தோன்னாளையும், வள்ளுவன் திருநாளையும், இளங்கோவன் இன்னாளையும் கொண்டாடுகின்றனர். பாகவதமும், இராமாயணமும் படித்தவர்கள், வீரத்தையும், காதலையும் நலனுற எடுத்துக்கூறும் புறநானூற்றையும் அகநானூற்றையும் அறிய ஆவல் கொள்கின்றனர். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைச் சிந்தைக்குணவென அருந்துகின்றனர். 'ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியத்தை அருளிய தமிழே! நந்தாவிளக்காம் சிந்தாமணியை நல்கிய தமிழே! ஒழுக்கத்திற்கோர் மணியெனத் திகழும் மணிமேகலையை ஈன்ற எம் தமிழே! என்று போற்றித் திருவகவல் இசைத்திடுகின்றனர். எல்லாம் எதனால்? எங்கும் 'தமிழ், தமிழ்' என்பதே பேச்சாகிவிட்டதாலன்றோ?

எனவே எந்த மொழிக்குஉயர்வு அளிக்கின்றோமோ அந்தமொழி நவிலும் நாகரிகத்தைத் தழுவுகிறோம் என்பது பெறப்படுகின்றது. ஹிந்தி அரசியல் மொழியாக வருமேல் அதற்கு முதன்மையும், மதிப்பும் அளிக்க நேரிடும். ஏனெனில் அம்மொழி தெரியாவிட்டால் அரசியல் அலுவலகங்களில் வேலை கிடைக்காது என்ற காரணத்தால் அம்மொழியைத்தான் தம்மக்கள் நன்கு கற்க விரும்புவர் பெற்றோர். அவ்விதம் ஹிந்திக்கு முதலிடம் தரப்படுமேல், தமிழ் பின்னணிக்குப் போய் மதிப்பாரற்றுச் சிதைவுறும். அதன் விளைவு, முன்பு ஆரியமொழியே உயர்ந்தது எனக்கருதித் தமிழை ஆரியத்தினும் தாழ்ந்தது எனக்கருதியதால் ஆரிய நாகரீகத்தை நாம் மேற்கொண்டது போலவே, ஹிந்திக்குத் தமிழைவிட மதிப்பளிப்பதால், வடமொழியின் மகளாம் ஹிந்திமொழி நவிலும் நாகரீகமாம் ஆரிய நாகரீகத்தை, விழிப்புற்றநாம், மறுமலர்ச்சிப்பாதையிலே மடமடவென முன்னேறும் நாம் தழுவ நேர்ந்து, முன்போலச் சூத்திரராய், தன்மானமற்றவராய், வறியராய், வடவர் கூலிகளாய் வாழ நேரிடுவதன்றி வேறென்னவாம்?

''ஆம், ஆம்! நீ கூறுவது முற்றிலும் உண்மை'' என்றிசைத்தான் இவ்வளவு நேரம் நான் பேசியதை அசையாது கேட்டுக் கொண்டிருந்த என் நண்பன்,

‘எனவே நண்பா, தமிழர் தம் ஒப்பற்ற நாகரீகம் நாசமாகாதிருக்க, தமிழர் தம் உயர்ந்த பண்பாடுகள் பாழாகாதிருக்க, தமிழ்மொழி செழித்தோங்க, தமிழர் வளமுடன் வாழ, வந்த இந்தியேகுமட்டும் வளையாமல் போரிடுவோம். நுழைந்த ஹிந்தி ஒழியுமட்டும் உழைத்திடுவோம், உழைத்திடுவோம். இஷ்ட பாடமாகவுந்தான் விட்டுவைக்க இசையோம் என்ற திட்டமுடன் போரிடுவோம். உயிருக்கும் உயிரான உயர் மொழியைக் காப்பதற்கு உடலுயிரீந்திடத் தயங்காமல் போர்புரிவோம். ஹிந்தியை யொழித்திடச் சிந்திடுவோம் செங்குருதி. பசுந்தமிழைக் காத்திடவே பச்சை ரத்தம் பரிமாறிடுவோம். “வெல்க தமிழ்! வாழ்க நற்றமிழர்” என்று கூறி முடித்தேன்.

‘வெல்க திராவிடம்! வீழ்க ஆரியம்!
வாழ்க செந்தமிழ்! ஒழிக ஹிந்தி!’

என நண்பனும் உரத்த குரலிலே கூவினான். “வாலறிவன்”

[2ம்பக்கத் தொடர்ச்சி]

கம் வெகுமும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு, அரசியல் உலகமென்றாலே தெரியாது இருந்த சூழ்நிலைமையில், இந்தியை எதிர்த்து ஆயிரமாயிரம் இளைஞர்கள் சிறை சென்றார்கள் என்று ராஜாஜி கூற பல முறை கேள்விப்பட்டிருக்கிறேன். நாட்டிற்குப் பொதுமொழி எதுவென்று இன்னும் வரையறுக்காத போது, மற்ற மாகாணங்கள் இந்தியை நுழைக்காத போது, சென்னை மட்டும் ஏன் பெரும்பாலான மக்கள் கருத்துக்கு மாறாக, இந்தியைக் கட்டாயமாக நுழைக்கவேண்டுமென்று எனக்கு விளங்கவே இல்லை. அதனால்தான், “இந்தி இளைய சகோதரியாக இருக்கவேண்டுமென்று பேச்சின் நடுவே என் கருத்தைப் புகுத்தினேன். ஆட்சியாளர்கள் கட்டாய இந்தியைப்பற்றி ஒரு வார்த்தை கூட என்னிடம் வெளியிடவில்லை இந்தி எதிர்ப்பு இயக்கம் என்று ஒன்று வேலை செய்வதாகக்கூட கூறவில்லை. சென்னையின் நிலைமை எவ்வளவு இரங்கத்தக்கதாக இருக்கிறதென்பதைப்பாவம் அவர்களென்ன அறிவார்கள்!

கம்யூனிசத்தைத் தாக்கினேன் என்று கருத்தற்றவர்கள் கூறுவார்கள். கம்யூனிசத்தின் அடிப்படைக் கொள்கைகளைக்கூட ஒப்புக்கொள்ளுகிறீர்களா என்று என்னைப் பலர் வியப்புடன் கேட்டனர். சென்னை அரசாங்கம்கூட ஒரு தனிப்பட்ட பெரும் பணக்காரனுக்காக எவ்வளவு கவலை கொள்ளுகிறது என்பது காரைக்குடி நிகழ்ச்சி நினைவூட்டியது. டாட்டா, பிர்லா இவர்கள் இந்தியாவையே உறிஞ்சுகிறார்களென்றால், அழகப்பா சென்னையை உறிஞ்சுகிறார். அழகப்பா அள்ளி வீசிய பணம் ஆயிரமாயிரம் தொழிலாளிகள் சிந்திய ரத்தம் என்பதை யார் அறிவார்கள். வறுமை நிறைந்த சென்னை மக்களைக் கண்டபிறகுதான் பணக்காரர்களை மக்கள் கூட்டத்திலிருந்தே விலக்குவது என்று உறுதி கொண்டேன். அதனால்தான் கம்யூனிசத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிறேனென்று மறைமுகமாகக் கூறினேன்.

இந்திரா! திராவிடர்கள் (தென்னாட்டவர்) தனிநாடு கோருவது குறித்து உனக்கு ஒன்றுமே தெரியாது. எனக்கும் தெரியாது என்றுதான் நீயும் நினைத்துக் கொண்டிருப்பாய். தென்னாட்டில் நடக்கும் ஒவ்வொரு செய்தியும் நானறிவேன். வடநாட்டவரது பிணைப்பு வேண்டாமென்பதுதான் அவர்கள் கோரிக்கை. அது எவ்வளவு உண்மையானது என்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. சென்னையின் தெருக்கள் வழியாக நான் அழைத்துச் செல்லப்பட்ட போது, என் கண்முன் குஜராத்தி மார்வாரி பனியாக் கடைகளே காணப்பட்டன. அவர்கள் குடியிருக்கும் கட்டிடம் கண்ணைக் கவரத்தக்க நிலைமையில் இருந்தது. எவ்வளவு உல்லாசமாக வாழ்க்கை நடத்துகிறார்கள் தெரியுமா? இந்திரா! ஆங்கிலேயர்களை என்ன காரணத்திற்காக நாம் எதிர்த்தோம், வெறுத்தோம். அதே காரணங்களைக் கொண்டுதான் அவர்கள் வடவர்களையும் கூடாது என்கிறார்கள். மார்வாரிகளும், குஜராத்திகளும்தான் என்னைப் பார்க்க வந்திருந்தார்கள். குழி விழுந்த கண்களுடனும், ஒற்றிய வயிற்றுடனும் மேலாடை கூட இல்லாத திராவிடர்களும்தான் வந்திருந்தார்கள். எவ்வளவு தூரம் இந்த மார்வாரி குஜராத்திகளால் அவர்கள் உறிஞ்சப்படுகிறார்கள் என்பது அவர்கள் புறத்தோற்றமே வெளிப்படுத்திற்று. அவர்கள் காட்சியை நினைக்க நினைக்க மயிர்க் கூச்செரிகிறது. அவ்வளவு வறுமையிலும் அவர்கள் காட்டிய உற்சாகமிருக்கிறதே அப்பப்பா அது சொல்லுந்தரமன்று. “பார்ப்பனர்களாலும் வடநாட்டவராலும் நாங்கள் எவ்வளவு தொல்லைப்படுகிறோம் பார்த்தீர்களா?” என்பது போன்று சிலர் கண்கள் என்னிடம் பேசின. அதனால்தான் அய்லந்து மைதானத்தில் “ஜனநாயகத்தை”ப்பற்றி ஒரு பெரிய சொற்பொழிவு நிகழ்த்தினேன். அது அவர்களுக்கு ஆறுதல் அளித்திருக்குமென எண்ணுகிறேன்.

பாகிஸ்தான் பிரியவேண்டுமென்ற காரணத்தைவிட திராவிடஸ்தான் பிரியவேண்டுமென்பதற்கு காரணங்கள் நிறைய உள்ளன. மதத்தின் அடிப்படையிலே பாகிஸ்தான் பிரிந்தது. இனத்தின் அடிப்படையிலே ஏன் திராவிடஸ்தான் பிரியக்கூடாது? பிரிய வேண்டியதும் நியாயம் தானே? இமய முதல் குமரிவரை ஒன்றாக இருக்கவேண்டுமென்று கனவு கண்டோம். மேடையிலே உணர்ச்சிததும்பப் பேசினோம். இந்தியத் துணைக் கண்டம் ஒரே நாடு—எல்லோரும் ஒரே இனம் என்று இறுமாப்புடன் பேசினோம். இவ்வளவும் ஒரு பெரும்பாலான இனத்தின் நலம் கருதாமலேயே கூவினோம். அது எவ்வளவு தவறு என்று இப்பொழுது தெரிகிறது.

திராவிடஸ்தானுக்கு நீங்களும் ஆதரவு தருகிறீர்களா, அது தனி நாடாக இருக்க ஒப்புக்கொள்ளுகிறீர்களா என்று வடநாட்டு மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம்


## புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

★

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

என்னை வினவுவார்கள். இந்திரா! புலி சிங்கம் ஓநாய் ஆடு முதலியவைகளை ஒரே கூண்டில் அடைக்க முடியுமா? சர்க்கஸ் கூடாரங்களில் கூட அவைகள் தனித்தனியாக அடைக்கப் பட்டிருக்கின்றனவே. அது போன்று, இருவேறு கலாசாரம், நாகரீகமுடைய மக்களை ஒன்றாகப் பிணைப்பது நியாயமா? திராவிடர்க்கழகம் தென்னாட்டில் நாளுக்கு நாள் வளருகிறது என்பது எனக்குத் தெரியும். நமக்கிருக்கும் அதிகார மமதையில், மனிதத்தன்மையை இழந்து விட்டால் வருங்காலச் சமுதாயமும் வாலாறும் தூற்றாதா?

வெள்ளையனைவிரட்டப்போராடிய இயக்கம் இன்று நாட்டு மக்களுக்கு இழைக்கக்கூடிய கேடுகள் பலப்பல. பஞ்சமும் பட்டினியும் மலிந்து கிடக்கின்றன. கொள்ளை லாபம் அடிப்போரும் கோடிக் கணக்காக சம்பாதிப்போரும் குவிந்துள்ளனர். பகுத்தறிவைப் பாழ்படுத்தவும் பழமைக்கு இட்டு செல்லக்கூடியனவுமாக மக்கள் மமதை கொண்டுள்ளனர். அதனால் தான் எனது சொற்பொழிவுகளிலெல்லாம் "உங்கள் தலைவர்களைப் பூஜிக்கும் கடவுள்களாக்காதீர்கள். பிழைகள் செய்தால் பயப்படாது கண்டியுங்கள்" என்று கூறினேன்.

இந்திரா! சென்னை மாகாணம் இன்று இல்லாமற்போயினும் என்றைக்காவது ஒரு தனி மாகாணமாகவே இருக்கு மென்பதில் எனக்கு அய்யமே இல்லை. இந்தியா, ஏன் உலகம் முழுவதும் நன்மை பெற செய்யக்கூடிய இயக்கம், இனி ஏதாவதொன்று இருக்குமாயின், அது திராவிடக் கழகமாகத்தான் இருக்குமென்பது என் முழு நம்பிக்கை. பிராமணன் கூடாது, சூத்திரன் கூடாது, மனிதன் தான் இருக்க வேண்டுமென்று அவர்கள் கூறுவதிலே எவ்வளவு உயர்வான இலட்சியம் பொதிந்துள்ளது என்பதைச் சிந்தித்துப்பார்! கடிதம் நீண்டுவிட்டது. காரியமும் நிறையக் கிடக்கின்றது.

உன் அன்புள்ள,
ஜவஹர்.

கடிதத்தைப் படித்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. "திராவிட நாடு திராவிடருக்கே" "அடைந்தே தீருவோம் திராவிட நாடு" என்ற ஒலி என் செவியில் முழங்கிற்று. எங்கிருந்து ஒலி வருகிறதென்று பார்க்க வெளியில் ஓடினேன். படார் என்று கீழே விழுந்து, விழித்த போதுதான் நான் படித்தது அனைத்தும் கனவு என்று தெரிந்தது. கனவு நனவாகும் என்பதில் மட்டும் எனக்கு அய்யமே இல்லை.

பொ. துரைசாமி.

★

தாய் முகம் அறியாப் பருவத்தில் தாதியிடம் ஒப்புவிக்கப்படும் குழந்தை தன் தாய்முகம் திரும்பிப் பார்க்குமோ, தான் வளர்ச்சியுற்ற போது?

ம. போ. சி.

## புதிய வெளியீடுகள்.

★

1. தீண்டாமை ரூ 1—8—0
2. இதோ! பெரியாரில் பெரியார் 0—6—0
3. திராவிடக் கழக லட்சியம் 0—4—0
4. மொழி—எழுத்து 0—4—0
5. வாழ்விலோர் திருநாள் 0—4—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.




## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறை பாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க் கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத் திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE